# அகத்தியர் ஞானம்

## தெளிவுரை

டாக்டர் வீ. ஞானசிகமாமணி

# அகத்தியர் ஞானம்

தெளிவுரை

முதல் பதிப்பு

உலகக் கிறிஸ்தவத் தமிழ்ப்பேரவை நடத்திய

முதல் கிறிஸ்தவ தமிழ் மாநாட்டில் வெளியிடப்பெற்றது

திருச்சி

திசம்பர், 28-30, 1981

(தெளிவுரை)

உலகக் கிறிஸ்தவத் தமிழ்பேரவை நடத்தும்

இரண்டாவது உலகக் கிறிஸ்தவத்

தமிழ் மாநாட்டில் வெளியிடப்பெற்றது

வேலூர்

திசம்பர், 27-29, 1983

“என்னை சிநேகிக்கிறவர்கள் மெய்ப்பொருளைச் சுதந்தரிக்கும் படிக்கும், அவர்களுடைய களஞ்சியங்களை நான் நிரப்பும்படிக்கும்.” நீதி.8:20.

“எப்பொருள் யார்யார்வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.” - திருக்குறள், 355.

“குணநாடிக் குற்றமு நாடி யவற்றுள்
மிகை நாடி மிக்கக் கொளல்.” - திருக்குறள், 504.

“காய் லுவத்த லகற்றி வொருபொருட்கண்
ஆய்த லறிவுடையார் கண்ணதே.”

“மண்ணாதி பூதமுதல் வகுத்ததொரு வான்பொருளைக்
கண்ணாரக் கானக் கருத்திசைத்து போற்றீரே.”

“பொய்ப் பொருளை விட்டுப் புலமறிய வொண்ணாத
மெய்ப்பொருளை நாளும் விருப்புற்று போற்றீரே.”

“பொய்யான கல்வி கற்றுப் பொருள் மயக்கங் கொள்ளாமல்,
மெய்யான ஞானக் கல்வி விரும்புவாய் கன் மனமே.

இடைக்காட்டுச் சித்தர் : பலரொடு கிளத்தல் - 51,54,61.

# அகத்தியர் ஞானம்

தெளிவுரை

உரையாசிரியர்
*இரட்சணிய யாத்திரிகச் சான்றோன்*
**டாக்டர் வீ. ஞானசிகாமணி**
எம்.ஏ., பி.எச்.டி.,டிப்.தெலு.,

பதிப்பாசிரியர்
வே. பென்னி, M.Sc., M.A., (Theo.), M.A., M.Phil. (Chr. Studies)
தென்னிந்திய கிறிஸ்தவ ஊழியம் (CMSI)
20, 2வது தெரு, கொங்குநகர்,
முகப்பேர், சென்னை-600 037.

அகத்தியர் ஞானம்
முதல் பதிப்பு : திசம்பர் 1983
இரண்டாம் பதிப்பு : 2009
மூன்றாம் பதிப்பு : 2012
நான்காம் பதிப்பு : 2014

© தென்னிந்திய கிறிஸ்தவ ஊழியம்

அச்சிட்டு வெளியிடுபவர்
வே. பென்னி, M.Sc., M.A., (Theo.), M.A., M.Phil. (Chr. Studies)
தென்னிந்திய கிறிஸ்தவ ஊழியம் (CMSI)
20, 2வது தெரு, கொங்குநகர்,
முகப்பேர், சென்னை-600 037.

அச்சிட்டோர் : மெய்ப்பொருள் அச்சகம்
சென்னை-23.

படையல்

மெய்ப்பொருளுக்கும்

மெய்ப்பொருள் அன்பர்களுக்கும்

# அறிமுகம்

**அகத்தியர் ஞானம்** - தெளிவுரை. 1981 திசம்பர் 28,29,30 ஆகிய நாள்களில் திருச்சியில் நடந்த முதல் உலகக் கிறிஸ்தவத் **தமிழ் மாநாட்டின்போது "அகத்தியர் ஞானம் - விளக்கவுரை"** என்னும் ஆராய்ச்சியுரை **252+12** பக்க அளவில் உலகக் கிறிஸ்தவத் தமிழ்ப் பேரவையின் பொதுச்செயலாளர் பேரா.முனைவர்.பொ.ஆ.சத்தியசாட்சி அவர்களின் முன்னுரை யுடன் வெளிவந்தது. இப்பொழுது அந்த உரை நூல் கையில் இல்லாத நிலையில் பல மெய்ப்பொருள் அன்பர்கள் கடந்த சில மாதங்களாகத் தொடர்ந்து நூல் வேண்டும் என்று கேட்டுக் கொண்டே இருந்தனர் - இருக்கின்றனர். இந்நிலையில் வேலூரில் இரண்டாவது **உலகக் கிறிஸ்தவத் தமிழ் மாநாடு** திசம்பர் 27,28,29 ஆகிய நாள்களில் நடக்கின்றது.

இந்தச் சூழ்நிலையில் பரம குருவின் அருளாசனத்தை நோக்கி மனம் நின்றபோது, இவ்வாறு ஒரு தெளிவுரையாக அமைந்துள்ள சுருக்கப் பதிப்பேனும் வெளிவருதல் வேண்டும் என்னும் சிந்தனை வல்லமையாகவும் ஆழமாகவும் ஆட்கொண்டது. இது கடவுளின் திருவுளச் சித்தத்திற்கு இசைந்ததே என்பதை அறிந்து (64 பக்க அளவில்) இத்தெளிவுரையினை வெளியிடுகின்றோம். முழு ஆராய்ச்சி யுரையும் இறைவருக்குச் சித்தமான காலத்தில் வெளிவரும் என்றே நம்புகின்றோம்.

பதினெண் சித்தருள் ஒருவர் அகத்தியர். இவர் பரமகுருவாகிய இயேசுபெருமானால் தடுத்தாட்கொள்ளப்பட்டார். பரம ஞான அநுபூதி அடைந்தார். இதனை உலகத்தவரும் அறிய வேண்டும் என்று "பரம குரு சொன்னபடி," 30 பாட்டுக்குள்ளே பாடியருளினார். என்றாலும் தமது நூலின் பொருட்டு ஏனைய சித்தர்களும் உலகத்தவர்களும் மயங்கித் தம்மையும் வைவார்கள்; தம் நூலையும் கிழித்துப் போடுவார்கள் என்றே அஞ்சினார்.

"மறைத்திட்ட பெரியோரும் உலகத்தோரும்
மயங்குவார்; என்னையுமே வசையாய்ச்
சொல்வார்; குறைத்திட்டே உரைத்த
இந்த நூலைத்தானே கூசாமல் சொல்லி
விட்டேன் கிழிக்கப் பார்ப்பார்" (25)

என்று பாடினார் அகத்தியர். ஆனால் பரமகுருவானவர் இந்நூலைக் காத்து வைத்திருக்கிறார்; வெளிப்படச் செய்திருக்கிறார். 1924 வரையில் 17 பக்கத்தில், கைத்துண்டு அளவில் 5 பதிப்புகள் வெளிவந்துள்ளன; 30,000 படிகள் அச்சிடப்பட்டுள்ளன; (Religious Tract and Society in Union with the CLS, CLS, Press, 1924). இந்தக் குறிப்பு 1981 ஆம் ஆண்டின் பதிப்பின்போது எனக்குக் கிட்டவில்லை. பின்னரே கிட்டியது. விக்கிரமசிங்கபுரத்து அ. வள்ளிநாயகம்பிள்ளை என்பவர் கிட்டத்தட்ட இதைப்போன்றே இன்னொரு பதிப்பு வெளியிட்டுள்ளார். மேலே காட்டிய பாடல்: "அறைந்திட்டேன் புலத்தியனே சமயம்பார்த்து அவர்களுக்கும் காண்பிப்பாய் அறியத்தானே" என்று முடிகின்றது. என்னை இந்த எழுத்துத் திருப்பணிச் செய்யுமாறு 1969 முதலாக உந்தி உரங்கொளச் செய்வதற்குப் பரிசுத்த ஆவியானவர், அகத்தியருடைய இந்தச் சொற்களைப்பயன்படுத்தினார். இதன் விளைவாகவே இந்த நூல் இப்பொழுது உங்களுடைய கரங்களில் இருக்கின்றது. அகத்தியரையும் என்னையும் ஆட்கொண்டு வழி நடத்திய பரிசுத்த ஆவியானவர், உங்களையும் ஆட்கொண்டு வழிநடத்தி, நீங்களும் பரமகுருவைப் பக்தி வாழ்க்கையிலே அறிந்து, இம்மை மறுமை நன்மைகள், ஆசிகள் எல்லாவற்றையும் பெற்றுப் பேரின்ப மெய்வாழ்வடைய துணைபுரிவாராக என்னும் மன்றாட்டுடன் அமைகின்றேன்.

**மெய்ப்பொருளடியான்**

# முனைவர் வீ. ஞானசிகாமணி

## (1943–2012)

'இரட்சணிய யாத்திரிகச் சான்றோன்', 'இலக்கியச் செல்வர்', 'தமிழ்மாமணி' முனைவர் வீ. ஞானசிகாமணி அவர்கள் 1943-ஆம் ஆண்டு சூலை மாதம் முதல் நாளில் இன்றைய திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிபூண்டி வட்டத்திலுள்ள காயலார்மேடு என்னும் கிராமத்தில் விவசாயத் தொழிலைச் சிறப்பாகக் கொண்ட திரு. வீரப்பிள்ளை (வேதநாயகம்) திருமதி. கண்ணம்மாள் (நகோமியம்மாள்) ஆகியோரின் முதல் மகனாகத் தோன்றினார்.

தொடக்கக் கல்வியைக் கிராமத்தில் திண்ணைப் பள்ளிக்கூடத்திலும் இராணுவ பள்ளியில் சேர்ந்து படிக்கும் வாய்ப்பைப் பெற்றார். கல்வியில் பின்தங்கிய இப்பகுதியில் அக்காலக்கட்டத்தில் பல மைல்கள் நடந்து சென்று கல்வி கற்க வேண்டிய சூழல். திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள மாதர்பாக்கம், சத்தியவேடு, கும்மிடிபூண்டி, பொன்னேரி, எண்ணூர் ஆகிய இடங்களில் இருந்த பள்ளிகளில் நடுநிலைக் கல்வியும், உயர்நிலைக் கல்வியும் கற்றார். பதினொரு ஆண்டுகளில் பள்ளிக் கல்வி பயின்ற ஏழு ஆண்டுகள் எண்ணூர் கிறித்து நகர் நிலைய மாணவர் விடுதியில் தங்கி கல்வி பயின்ற வாழ்க்கையானது இவருடைய பல்வேறு மாற்றங்களுக்கும் முன்னேற்றங்- களுக்கும் நேராய் வழிகோலியது. PUC படிப்பை சென்னை தியாகராயர் கல்லூரியிலும், தாம்பரம் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் இளங்கலை வரலாறும் (1962-65) பயின்றார். அங்கு ஏற்பட்ட இலக்கிய சமய தாக்கத்தின் காரணமாக சென்னை மாநிலக் கல்லூரியில் முதுகலை தமிழ் இலக்கியம் பயின்றார்.

தமிழ் மூதறிஞர், நூற்றுக்கணக்கான ஆய்வு மாணவர்களையும், படைப்பாளர்களையும், பேராசியர்களையும் உருவாக்கிய டாக்டர் மு. வரதராசனார் அவர்களின் மேற்பார்வையில் எச். ஏ. கிருஷ்ண பிள்ளையின் நூல்கள் பற்றி முதன்முதலாக ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்ற சிறப்புடையவரும் இவரே. இவர் எபிரேயம், கிரேக்கம், தெலுங்கு முதலிய மொழிகளைப் படிக்கும் காலத்திலேயே கற்றார். இளங்கலைப் பட்டம் படிக்கும் காலத்திலேயே 'கிறித்தவ உபதேசம்' என்ற நூலைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

தமிழ் இலக்கியம் பயின்றதின் காரணமாகவும் கிறித்தவ இலக்கியத்தின் ஆராய்ச்சி மேற்கொண்டதன் விளைவாகவும் 'வேதாகம மாணவர் பதிப்பகம்' Bible Student Publications என்னும் நூல் வெளியீட்டு நிறுவனத்தை அமைத்து, இலக்கியத் தொண்டை மேற்கொண்டார். பதிப்பகத்தின் நோக்கமாக ஆங்கிலத்திலுள்ள சிறந்த வேத ஆராய்ச்சி நூல்களை மொழிபெயர்த்து வெளியிடுதல், அறியப்படாமலிருக்கிற கிறித்தவ இலக்கியங்களைப் பதிப்பித்தல், தமிழ்க் கிறித்தவ இலக்கியங்கள் உருவாக ஊக்குவித்தல், வேதாகமத்தின் உண்மைகளை நூல்கள், கைப்பிரதிகள் வாயிலாக நற்செய்திப் பணி செய்தல் என பல நிலைகளில் பொருள் நோக்கமின்றிப் பலதிறப் பணிகளை செயல்படுத்தியிருக்கிறார்.

### பதிப்புப் பணி

பதிப்பகத்தின் வழி அவர் எழுதி வெளியிட்ட நூல்கள் 5, உரையெழுதி பதிப்பித்தவை 5, பதிப்பாசிரியராக பதிப்பித்த நூல்கள் 7, வேதாகம இலக்கியப் பதிப்பகம் வெளியிட்ட நூல்கள் 7, மொழிபெயர்த்துப் பதிப்பித்த நூல்கள் 40, ஆங்கில நூல்கள் பதிப்பு 10, ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டது 3, பிறமொழி பதிப்பு 9 (தெலுங்கு, காசி), இதழ்கள் 2, ஆகமொத்தம் ஏறக்குறைய 88

நூல்களை வெளியிட்டுள்ளார். கருத்தரங்குகளிலும், இதழ்களிலும் தொடர்ந்து இறுதிவரை இவரது ஆய்வுக் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. இவர்தம் இறுதிகாலம் வரை இலக்கிய உலகோடு தொடர்புடையவராக இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவருடைய சில நூல்கள் மறுபதிப்புகளாக கிறித்தவ இலக்கியச் சங்கம் CLS, மணிவாசகர் பதிப்பகம் முதலான பதிப்பகங்கள் வழி வெளிவந்துள்ளன. 'இரட்சணிய தேவாரம்' என்னும் இவருடைய உரைநூல் சென்னைப் பல்கலைக் கழகத்தின் 150-வது ஆண்டு வெளியீடுகளுள் ஒன்றாக வெளியிட்டு சிறப்பித்துள்ளது.

## நற்செய்திப் பணி

பள்ளியில் பயின்ற இளம்வயதிலேயே தன் குடும்பத்தில் முதன்முதல் இயேசு கிறித்துவை ஏற்றுக்கொண்ட இவரைப் பின்பற்றி இயேசு பெருமானின் அன்புக்குள் ஈர்க்கப்பட்ட உடன்பிறந்தோரும் உற்றாரும் மற்றோரும் எண்ணற்றோர். பல்கலைக்கழக பேராசிரியராகவும் ஆய்வறிஞராகவும் விளங்கிய இவர் வசதியோடு வாழ்ந்து புகழும் பொருளும் குவிக்கும் வாழ்க்கையைத் தமக்கு அமைத்துக்கொள்ளும் ஆற்றல் பெற்றிருந்தாலும் கிறித்துவின் நற்செய்திப் பணிக்காக ஓர் எளிய இறைத் தொண்டராகத் தம்மை ஆக்கிக் கொண்டார். கிறித்துவின் திருச்சபைப் போதகராக இவர் ஆற்றிய அருளுரைகள், நடத்திய திருமணங்கள் இதர நிகழ்வுகள் ஏராளம். 'இந்திய நற்செய்தி ஊழியம்' என்ற அமைப்பின் வழி வட தமிழகத்திலும் ஆந்திராவிலும் இவரால் உருவாக்கப்பட்ட மாணவர் விடுது மற்றும் திருச்சபைகள் நூற்றுக்கும் மேற்பட்டவை.

1986ஆம் ஆண்டு அகில இந்திய கிறித்தவச் சபைகள் மாநாடு (All India Church of Christ / Christian Church Convention) உருவாகக் காரணமாக இருந்தார். இந்த சபைகள் மாநாடு இன்றளவும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

தமிழகம் மட்டுமல்லாமல் கேரளா, கர்நாடகம், ஆந்திரா, மத்தியபிரதேசம், உத்திரபிரதேசம், மேகாலயா ஆகிய மாநிலங்களில் உள்ள கிறித்துவின் திருச்சபைகளிலும் திருமறைக் கல்லூரிகளிலும் திருமறை அருளுரைகள் நிகழ்த்தியுள்ளார்.

நற்செய்திப் பணிக்காக ஆஸ்திரேலியா, நெதர்லாந்து, தலைநகர் ஆம்ஸ்டர்டாம் முதலான மேலை நாடுகளுக்குச் சென்றுள்ளார்.

சென்னை வானொலியில் தமிழ் இலக்கியம் சார்ந்த உரைகள் நிகழ்த்தியுள்ளார். தொலைக்காட்சியில் இவருடைய சொற்பொழிவுகள், கலந்துரையாடல்கள் ஒலிபரப்பாகியுள்ளன.

'உலகக் கிறித்தவத் தமிழ் இலக்கியப் பேரவை' என்ற அமைப்பு உருவாகப் பெருந்துணையாய் இருந்தவர். தொடர்ந்து நடைபெற்ற உலகக் கிறித்தவத் தமிழ் மாநாடுகளில் இவருடைய பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

### கல்வி – இறையியல் பணி

சென்னையிலுள்ள தென் ஆசியக் கிறித்தவக் கல்லூரியில் 12 ஆண்டுகள் சமய ஒப்பாய்வு (Comparative Religion) கற்பித்துள்ளார். சென்னையிலுள்ள நற்செய்திக் கல்வி நிலையத்தில் ஆறு ஆண்டுகள் திருச்சபை வரலாறு பயிற்றுவித்துள்ளார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் கிறித்தவ இலக்கிய இருக்கையில் சில ஆண்டுகள் கௌரவப்

பேராசிரியராகப் பணியாற்றிய சமயத்தில் பல்கலைக் கழகத்தில் பல அறக்கட்டளைகள் நிறுவப் படுவதற்குக் காரணமாய் விளங்கினார். கிறித்தவத் தமிழ் இலக்கிய இருக்கைக்கும் கிறித்தவ இலக்கியத்திற்கும் சென்னைப் பல்கலைக்கழகத்தில் உயிரூட்டியவராகவும் திகழ்ந்தார்.

ஞானசிகாமணி என்ற ஒரு மனிதர் - நற்செய்தியாளர் - கிறித்தவ இலக்கிய அறிஞர் - என்ற இறை அடியாரின் வாழ்வும் பணியும் படைப்பும் அநேகருடைய வாழ்க்கை முன்னேற்றத்திற்கு வழி வகுத்துள்ளது.

## அகத்தியர் ஞானம்

## பரத்திலிருந்து வரும் ஞானம்

"உங்களில் ஞானியும் விவேகியுமாயிருக்கிறவன் எவனோ அவன் ஞானத்திற்குரிய சாந்தத்தோடே தன் கிரியைகளை நல்ல நடக்கையினாலே காண்பிக்கக்கடவன்.

உங்கள் இருதயங்களிலே கசப்பான வைராக்கியத்தையும் விரோதத்தையும் வைத்தீர்களானால், நீங்கள் பெருமை பாராட்டாதிருங்கள்; சத்தியத்திற்கு விரோதமாய்ப் பொய் சொல்லாமலுமிருங்கள்.

இப்படிப்பட்ட ஞானம் பரத்திலிருந்து இறங்கி வருகிற ஞானமாயிராமல், லௌகீக சம்பந்தமானதும், ஜென்ம சுபாவத்துக்குரியதும், பேய்த்தனத்துக்கடுத்ததுமாயிருக்கிறது. வைராக்கியமும் விரோதமும் எங்கே உண்டோ, அங்கே கலகமும் சகல துர்ச்செய்கைகளுமுண்டு.

பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாத தாயும், மாயமற்றதாயுமிருக்கின்றது; நீதியாகிய கனியானது சமாதானத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது."

யாக்கோபு 3:13-18.

## பாடுகின்றேன் முப்பதுக்குள்

1. பூரணமாய் மும்மூர்த்தி வந்த வாறும்;
பூமி என்றும் திகிரி என்றும் படைத்தவாறும்;
காரணமாய் தேவியரும் நிறைந்தவாறும்;
கற்பம் உண்டு ரிஷிகள் சித்தர் சாகாவாறும்;
வாரணமாம் பறவையோடு நாற்கால் சன்மம்,
மானிடர்கள் கூறுகின்ற குலத்தின்வாறும்,
பாரணமா நால்வேதம் வந்த வாறும்,
பாடுகின்றேன் முப்பதுக்குள் பார்க்கத் தானே!

**கருத்துரை :** மும்மூர்த்திகள் எவ்வாறு வந்தனர், அவர்கள் பூமியையும் மலைகளையும் எவ்வாறு படைத்தனர், அவர்களுடைய தேவியர் எவ்வாறு காரணமாய் நிறைந்து இருந்தனர், கற்பம் சாப்பிட்டு ரிஷிகளும் சித்தர்களும் எவ்வாறு சாகாமல் இருந்தனர்; மாவிலங்கு பறவை ஏனைய மிருகங்கள், மனிதர்கள் கூறும் குலம், நான்கு வேதங்கள் முதலானவை எவ்வாறு வந்தன என்னும் செய்திகளை முப்பது பாட்டுக்குள்ளே (நீங்கள்) பார்ப்பதற்குப் பூரணமாக அமைக்கின்றேன் என்றவாறு.

**குறிப்புரை :** அகத்தியர் பரமகுருவானவரின் திருவருள் வயப்பட்டு அவரால் ஆட்கொள்ளப்பட்டு ஞானம் பெற்றார். அவர் பெற்ற பேரின்ப ஞானத்தை, "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்றவாறு மற்றவர்களும் பெறச் செய்ய வேண்டும் என்று பரம குருவானவர் கட்டளையிட்டருளினார். அந்தச் கட்டளையைச் சிறமேற்கொண்டு தாம் கண்டடைந்த மெய்ப்பொருளை **முப்பது** பாட்டுக்குள்ளே அமைத்துப் பாடினார். தாம் கூற வந்த செய்தியை முப்பது பாட்டுக்குள் அமைத்துப் பாடுவதை, "பாடுகின்றேன் முப்பதுக்குள்" என்று தொடங்குகின்றார்.

தமது ஞான நூலை முடிக்கும்போது:

"பாடுகின்ற முப்பதுக்குள் அடக்கிப் போட்டேன்;
பரமகுரு சொன்னபடி பாடினேனே"

என்று கூறியே நிறைவு செய்கின்றார்.

## தமிழர் சமயம் என்பது நான்கு வேதங்களின் மயக்கமாகும்

2. பாரப்பா பூரணத்தின் மனதை யொட்டி,
பரப்பிரம நாதமது சிவத்தில் சேர்த்து
தேரப்பா சக்தியையும் சாம்பலாக்கி,
சிவசிவா என்ற பொருள் கைக்குள்ளாக்கி,
போரப்பா நால்வேத மயக்க மாக்கி,
பூமியிலே மானிடரை மோசம் போக்கி,
வேரப்பா சித்தரும் பூரணம் தாக்கி
வேடிக்கை போல்கட்டி விடுத்தார்தானே.

**(க–ரை)** : பூரணமானவரான முழுமுதற் கடவுளாகிய பரப்பிரமனை, அவருடைய குணத்துடன் இசைந்து போவதுபோல அமைத்து சிவனுடன் சேர்த்துவிட்டதைத் தேர்ந்து அறிந்துகொள்; சக்தியையும் சாம்பலாக்கி சிவசிவா என்ற பொருளைக் கைக்குள்ளாக்கிவிட்டது ஒரு போர். நான்கு வேதங்களை வேடிக்கைப்போலக் கட்டி எழுதி பூமியிலே மக்களை அவற்றால் மயக்கி மோசம் போக்கிவிட்டனர்; ஆனால், சித்தர்கள் பூரணமாம் முழுமுதலை அறியவும் அறிவிக்கவும் வேறாகத் தனித்து நிற்கின்றனர் என்றவாறு.

**(கு–ரை) :** தமிழர் சமயம் என்பது நான்கு வேதங்களை முதலாகக் கொண்டு இணைத்து தோற்றுவிக்கப் பட்டதனால் உண்டான ஒரு மயக்கம் என்கிறார் அகத்தியர்.

இப்பாடலில் தமிழர் சமயம் என்ன என்பதும், இவற்றால் மக்கள் மோசம்போன நிலைமையும் கூறப்பட்டது அறிக. இந்திய நாட்டின் மிகப் பழைய வேதங்களின் தெய்வ நிலையே இதுவானால், அவற்றை அடிப்படையாய்க் கொண்டும், அவற்றைச் சார்ந்தும் தோன்றிய சமயங்கள், தெய்வங்கள், தத்துவங்கள் இவற்றின் நிலை எத்தகையதாக இருக்கும் என்பதை இந்தப்பாடலில் அகத்தியர் சிந்திக்கவைக்கின்றார். இந்தச் சிந்தனையே சித்தர்களுக்குத் தோன்றியது.

## பதினெண் சித்தர் ஆராய்ச்சி

3. விடுத்தார்கள் சித்தர் பதினெட்டுப் பேர்க்கும்
வெவ்வேறே குணமுண்டு, விதிக்க மாட்டேன்;
தொடுத்தான் காண் கொங்கணவன் சொன்ன நூறான்
தொகையப்பா மிச்சமடா சோதித்தாக்கால்
எடுப்பாக வயித்தியத்தில் ஐயாயிரத்துச் சொச்சம்,
என் சொல்வேன் ஞானத்தில் ஐயாயிரத்துத் தெட்டு,
கடுப்பாகப் பலநூலை ஊன்றிப் பார்க்க
கவலையினால் கட்டிவிட்டான் கலங்கத்தானே.

**(க-ரை) :** சித்தர் பதினெட்டுப் பேர்க்கும் வெவ்வேறு குணங்கள் உண்டு; அவற்றைக் கூறமாட்டேன். கொங்கணவன் நூறு செய்தான்; அவற்றை ஆராய்ந்து பார்த்தால் 5000 - க்கு மேற்பட்ட பாக்களைப் பாடினான்; ஞானத்தில் 5008 பாடினான்; இப்படிப் பல நூல்களையும் ஊன்றிப் பார்த்தால், நல்வழியைத் தேடிய அவனுடைய கவலையினால் பொருள் தெளிவு பெறாத பல நூல்களைச் செய்து மக்களைக் கலங்கப் பண்ணிவிட்டான்.

**(கு-ரை) : சித்தர் பதினெட்டுப்பேர்க்கும் :** சித்தர்களின் தொகை பதினெட்டு என்று அறிகின்றோம். இவர்கள் யாவர்? பதினெண் சித்தர் துதி பாடல் இவர்களைப் பின் வருமாறு கூறுகின்றது;

"நந்தி அகத்தியர், மூலர், புண்ணாக்கீசர்,
நற்றவத்துப் புலத்தியரும், பூனைக் கண்ணர்
நந்திடைக் காடரும், போகர், புலிக்கையீசர்,
கருவூரார், கொங்கணவர், காலாஞ்சி
சிந்தி எழுகண்ணர், அகப்பேயர், பாம்பாட்டி,
தேரையரும், குதம்பையரும், சட்டை நாதர்,
செந்தமிழ்ச் சேர் சித்தர் பதினெண்மர் பாதம்
சிந்தையுன்னிச் சிரத்தணியாய்ச் சேர்த்தி வாழ்வாம்"

அகத்தியர், போகர், கைலாயநாதர், கோரக்கர், திருமூலர், சட்டைமுனி, கொங்கணர், கூன்கண்ணர், இடைக்காடர், நந்தீஸ்வரர், புண்ணாக்கீசர், உரோமரிஷி, மச்சமுனி, கூர்மமுனி, சமலமுனி, வாசமுனி, பிரமமுனி, சுந்தரானந்தர் என்று சித்தர் பதினெண்மர் என்பர். இவர்களையல்லாமல்: கருவூரார், புலத்தியர், புசுண்டர், இராமதேவர், தன்வந்தரி, கபிலர், முதலானோரையும் சித்தர்களில் அடக்கிக் கூறுவர். இவர்களுள் அகத்தியர் குறிப்பிட்டுள்ள பதினெண்மர் யார் என்பதைத் திட்டமாக வரையறுக்க இயலவில்லை: ஆனால் தம் பாக்களில் **கொங்கணவன்** (3-4,) **தேரையன்** (4), **சுந்தரன்** (4,5), **கருவூரார்** (8), **புலத்தியன்** (7), **இடைக்காட்டுச் சித்தர்** (5), **கழாய்ச் சித்தர்** (5), **பாம்பாட்டிச் சித்தர்** (5) ஆகியவர்களைக் குறித்துக் காட்டுகின்றார்.

அகத்தியர் பதினெண் சித்தருக்குச் சமகாலத்தவராகவும் அவர்களுக்குள் பலரை அறிந்தவராகவும் தோன்றுகின்றது. **சித்தர் வரிசையில் அகத்தியருக்கு முதலிடம் அளிக்கப்பட்டுள்ளது** என்று சென்னைப் பல்கலைகழகத்தின் வரலாற்றுத் துறை பேராசிரியர் டாக்டர்.கே.கே.பிள்ளை கூறியுள்ளதைக் காண்க.

*(கே.கே.பிள்ளை : தமிழக வரலாறு - மக்களும் பண்பாடும்.பக்.409-10.)*

## சுந்தரன், கொங்கணவன், தேரையன்

4. கட்டினான் என் சீடன் சுந்தரனோ வென்றால்
கலைஞானம் பார்த்திருந்தும் கபடாய்த்தானே!
காட்டினான் பலநூலை வெளியில் போட்டுக்
கோபத்தால் முன்னூலைக் கொலைத்துப் போட்டான்.
கட்டியதோர் கொங்கணவன் சொன்ன நூறான்
கஞ்சாவின் மயக்கமடா! கருதியேதான்
எட்டினான் தேரையனும் சொன்ன ஞானம்
எட்டில் ஒன்று திட்டமதாய் இயம்பினானே!

**(க-ரை) :** என்னுடைய சீடன் சுந்தரனோவென்றால், ஞானத்தைப் பார்த்து அறிந்திருந்தும் கபடாகவே கட்டினான்; தன்னுடைய கோபத்தால் முன்னூலை அழித்துப்போட்டான்; பல நூல்களை வெளியிலே கொட்டினான். கொங்கணவன் எழுதிய நூறும் கஞ்சாவின் மயக்கம் போன்றவை; இதனைக் கருதியே தேரையனும் ஞானத்தைக் குறித்து எழுதினான்; அவன் எழுதியதில் எட்டில் ஒன்றுதான் மெய்யாக விளங்குகின்றது.

**(கு-ரை) :** அகத்தியருடன் உடன்பட விரும்பாத அவருடைய சீடன் சுந்தரன் என்பான் அகத்தியர் கண்டது போல உண்மை ஞானத்தைக் கண்டிருந்தும் கபடாகவே நடந்துகொண்டு, பல நூல்களைக் கோபத்தால் அழித்துப்போட்டான் என்று கூறுகின்றார் அகத்தியர். அந்நூல்கள் அகத்தியர், மெய்ப்பொருள் காண்பதற்குத் துணை செய்த பழங்காலத் தமிழ் கிறிஸ்தவ இலக்கியங்களே என்று துணிவதன்றி வேறுவழியில்லை.

## இடைக்காட்டுச் சித்தர், கழாய்ச் சித்தர்
## பாம்பாட்டிச் சித்தர்

5. இயம்பினார் வஸ்துநிலை அறிந்து சொன்னார்,
என்னுடைய சுந்தரனும் சொல்லவில்லை;

நயம் பெறவே இடைக்காட்டிற் சித்தர்தானும்
ஞானமது கோடி சொன்னார் நன்மையாக;
கயம்போல மயங்கிடவே வைத்தாரப்பா;
கழாய்ச் சித்தனும் அப்படியே சொன்னான்.
பயம்புடைய பாம்பாட்டிச் சித்தர் மற்ற
பதினெட்டு பேர்களுக்கு மென்னோடாச்சே.

**(க-றை) :** மெய்ப்பொருளின் நிலையினை அவரவர்கள் அறிந்த அளவில் சொன்னார்கள்; என்னுடைய சுந்தரனும் சரியாகச் சொல்லவில்லை. இடைக்காட்டுச் சித்தர் நன்மையாக நினைத்து ஒருகோடி ஞானம் சொன்னார். அவற்றால் மக்களை யானையைப் போல மயங்கச் செய்தார்; கழாய்ச் சித்தனும் அப்படியே செய்தான்; என்னோடு சேர்ந்த மற்ற பதினேழு சித்தர்களும் அப்படியே செய்தார்கள்.

**(கு-றை) :** 2-5 பாடல்களில் அகத்தியர் தவிர மற்ற சித்தர்கள் மெய்ப்பொருளைத் தேடியதில் பூரணமாய் அறியாமல் அவர்களும் மயங்கி, மக்களையும் மயக்கத்துக்குள்ளாக்கிச் செய்த நூல்களைக் கூறி அவற்றின் பயனின்மையைத் தெளிவுபடுத்தினார்.

## நன்றாய்க் கேட்க

6. ஆச்சப்பா புலத்தியனே நன்றாய்க் கேளு:
ஆறு லட்சம் கிரந்தமதை அருளிச் செய்தேன்;
பேச்சப்பா பூரணத்தின் மூன்று லட்சம்
பேசினேன் ஆயிரத்துள் அடக்கிப்போட்டேன்;
காய்ச்சப்பா ஆயிரத்தை ஐந்நூ றாக்கிக்
கட்டினேன் ஐந்நூற்றை நூற்றுக்குள்ளே
மூச்சப்பா நூறதுவை ஐம்பதாக்கி
முகித்திட்டேன் முப்பதுக்குள் முக்கியந்தானே!

**(க-ரை) :** புலத்தியனே நான் கூறுவதை நன்றாய்க் கேட்பாயாக: ஆறு இலட்சம் கிரந்தங்களை எழுதினேன்; அவற்றை பூரணப்படுத்த ஆராய்ந்தபோது அவற்றுள் மூன்று இலட்சத்தை ஆராய்ந்து பார்த்து ஆயிரத்துக்குள் அடக்கினேன்; அவற்றையும் நுணுகி ஆராய்ந்து ஐந்நூறு ஆக்கினேன்; அந்த ஐந்நூற்றையும் நூறாக்கினேன்; நூற்றையும் ஐம்பதாக்கினேன்; முடிவில் அவற்றின் முக்கியம் கருதி முப்பது பாட்டுக்குள்ளே அடக்கிவிட்டேன்.

முன்னுரையாக அறிவித்த முதல் பாடலைத் தவிர, 2 முதல் 5 பாடல்களில் உடன்சித்தர்கள் பகுத்தறிவுக்கு உட்பட்டு தமக்கு முன்னிருந்த சமயசாத்திரங்களிலும், தாம் கண்ட உலகத்திலும் மெய்ப்பொருளைத் தேடித் தெளிவு பெறாமல் அவர்கள் மயங்கியது மட்டுமன்றி, அவர்கள் அறிவித்த செய்தியால் மக்களையும் மயக்கியதையும் கூறினார். இந்தப் பாடல் முதலாக தாம் கண்ட மெய்ப்பொருளையும் பரமகுருவையும் உலகத்தவர்க்கு அறிவிக்கி ன்றார் அகத்தியர்.

### சுத்த சிவன் இருப்பிடம்

7. முகிவாகச் செய்துவிட்டேன் மைந்தா! மைந்தா!
   முப்பதுக்குள் அடக்கிவிட்டேன் முன்னூல் பார்த்து
அகிலமதில் விரித்துவிட்டேன் இந்த நூலை;
   யார்தானும் எந்தனைப்போல் அறைய மாட்டார்.
பகிரதியும், கலைமகளும், வாணி தானும்,
   பார்வதியும், அறுமுகனும், பலபேர் தானும்,
சகியாத மூர்த்திகளாம் இவர்கள் தானும்
   சுத்த சிவன் இருப்பிடமோ சாற்றுவீரே!

**(க-ரை) :** மைந்தனே! முப்பதுக்குள் எல்லாவற்றையும் அடக்கி விட்டேன்; முன்னூலைப் பார்த்து இந்நூலை உலகத்தில் செறிவாக எழுதிவிட்டேன்; என்னைப்போல யாரும் சொல்ல

இயலாது; பகிரதி, கலைமகள், வாணி, பார்வதி, அறுமுகன், இன்னும் பலரும், சகிக்க இயலாத மும்மூத்திகளும் சுத்த சிவனுடைய இருப்பிடமாவாரா சொல்லுங்கள்!

**(கு-ரை) :** சிவன் என்பதால் முழுமுதல் கடவுளை ஏற்றுக்கொள்ளும் அகத்தியர், சுத்த சிவன் என்றதால் நான்கு வேதங்கள், புராணங்கள், சமய சாத்திரங்கள் முதலானவை கூறும் சிவனிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றார்.

## கருவூரார் கருத்து

8. சாற்றுவதற்கு இதின் நியாயம் தெரியக்கேளு:
தந்திமுகனார் என்றும், அயனார் என்றும்,
பார்த்தால் இவ்வுலகமதின் மயக்கம் அப்பா!
பலதேவர் முப்பது முக்கோடியோரும்,
வேற்றுருவோடு உருத்திரனோடு ஐந்து பேரும்,
வேதாந்த விருப்பிடத்தின் வெளிச்சமாமே!
காத்திருப்பார் இவர்கள் தீக்கிடங்கை நாடி
கருவூரார் இப்படியே கருதினாரே!

**(க-ரை) :** இதன் நியாயத்தைத் தெரியும்படிச் சொல்லுகிறேன் கேளுங்கள்! யானை முகனார் என்றும், அயன் என்றும் பார்த்தால், இவர்கள் இவ்வுலகத்தின் மயக்கமாவார்கள்; பற்பல தேவர் என்று கூறப்படும் முப்பது முக்கோடி பேரும், உருத்திரனுடன் சேர்ந்த வெவ்வேறு உருவினராகிய ஐந்து பேரும் வேதாந்தத்தின் வெளிச்சமாவார்களா? இவர்கள் தீ நகரத்தை நாடி காத்திருப்பவர்கள் என்று கருவூரார் கருதியிருக்கின்றாரே!

**கருவூரார் இப்படியே கருதினாரே! :** கருவூரார் என்னும் சித்தர் மேற்சொன்னவாறு கருதியது மட்டுமன்றி அவர்கள் எரி நகரத்தை நோக்கிக் காத்துக் கொண்டிருப்பார்கள் என்றும் கூறியதை அகத்தியர் இங்கு அறிவிக்கின்றார்.

இவர் கொங்கு நாட்டில் பிறந்தவர் என்பர். மேலும் இவர் போக முனிவரின் மாணவர் என்றும் ஒன்பதாம் திருமறையில் திருவிசைப்பா என்னும் பகுதியில் இவருடைய பாக்கள் உள்ளன எனவும், இவர் வைத்திய நூல்கள் பலவும் எழுதியிருக்கின்றார் என்றும் கூறுவர். இவரைக் குறித்துப் பல செவி வழிக் கதைகள் வழங்குகின்றன. சாதி சம்பிரதாயங்களை இவர் புறக்கணித்ததால் இவரிடம் வேதியர் வெறுப்புக் கொண்டனர் என்றும், இவரை இழித்தும் பழித்தும் பேசினர், துன்புறுத்தினர் என்றும் தெரிகிறது. 'கருவூரார் கருதினார்'. என்று அகத்தியர் கூறிய கருவூராரின் பாடல்கள் ஏதும் கிட்ட வில்லை.

அவைகள் எல்லாம் இவருடன் முரண்பட்டு இவரைத் துன்புறுத்திய வேதியர்களால் அழிக்கப்பட்டிருக்க வேண்டும். **பதினெண் சித்தர் ஞானக் கோவையில் கருவூரார் பூஜாவதி** என்னும் தலைப்பில் முப்பது பாடல்கள் மட்டுமே அச்சிடப்பட்டு உள்ளன. அப்பாடல்களுள் ஒன்று வருமாறு:

"புகலுவார் வேதமெல்லாம் வந்ததென்று
பொய்பேசிச் சாத்திரங்கள் மிகவுங்கற்றே!
அகலுவார் பெண்ணாசை விட்டோமென்றே;
அறிவு கெட்டு ஊர்தோறுஞ் சுற்றிச் சுற்றிச்
சகலமுமே வந்தவர்போல் வேடம் பூண்டு
சடைமுடியுங் காசாயந் தன்னைச் சாற்றி
இகலுமன மடங்காமல் நினைவு வேறாய்
எண்ணமெல்லாம் பெண்ணாசை பூசை தானே".

*(ஞானக்கோவை என வழங்கும் சித்தர் பாடல்கள், பக்.326.)*

இப்பாடலைக் கொண்டே இவருடைய சமயச் சீர்த்திருத்தமுள்ள மனத்தைக் காணலாம். இதன் அடிப்படையிலே அகத்தியர் மேற்கோள் காட்டிய இவர் கூற்றும் உறுதிப்படுதலை

உணர்ந்தறியலாம், சங்கராச்சாரியாரும், சிவவாக்கியரும் கருவூராரைப் போலவே கருதியதைக் காண்கின்றோம்:

"உலகிலே பிறந்த முன்னோ
    ரோதிய கலைகளெல்லாம்
நிலையதாஞ் சோதி தன்னை
    நிசமதாய்ச் சொன்னதில்லை;
பலப்பல பேதமாகப்
    பங்கமாய்க் கூறு செய்து
அலகை போல் பொய்யைப் பேசி
    யரு நரகமுந்திப் போனார்."

– *சங்கராச்சாரியார்*

"அண்ணலாம் பரம சோதி அற்புத மறியாதாலே
கண்ணிலே கண்ட தெல்லாங் கதித்ருங் கடவுளென்று
மண்ணுள்ளோர் வணங்கினார்கள் வான்முறைப்படி தென்ன
எண்ணியே நடந்து மோட்சமிழந் தெரிநரகில் வீழ்வார்."

– *சிவவாக்கியர்*

## நெறி பத்து

9. கருதினார் இப்படியே சொன்னேன் அப்பா!
    கயிலாய இடம் எங்கே? கருவூர் எங்கே?
பருதியடா உலகமது பனியின் வாழ்வு;
    பராபரனார் ஆறுசொயம் பகர்ந்த சோதி!
ஒருவருமே நிகராத வஸ்து அப்பா!
    ஓகோ கோ மயங்காதே; ஊன்றிப் பார்த்து,
திரிபொருளை அறிவினால் உணர்ந்து பார்த்து,
    தெரிசிப்பாய் நெறி பத்தும் தெரிகிப்பாயே!

**(க–ரை) :** அவர்கள் கருதியபடியே நான் சொன்னேன் அப்பா. கயிலாயத்தின் இடம் எங்கே இருக்கின்றது? கருவூர் எங்கே

இருக்கின்றது? இந்த உலகத்தின் வாழ்வு சூரியன்படும் பனியின் நிலையைப் போன்றது; பராபரனாகிய கடவுள் ஆறு குணங்களைக் கொண்ட சோதி; அவருக்கு எப்பொருளுமே ஒப்பாக முடியாது; எனவே மயங்காதே! ஆழ்ந்து கவனித்துப்பார்த்து முப்பொருளை அறிந்து உணர்ந்து பார்; பத்து நெறிகளைக் காண்பாய்.

**(கு-ரை) :** இப் பாடலில் உலக வாழ்வின் நிலையாமையையும், உண்மையான பரம்பொருளின் பண்புகளையும், திரிபொருளையும், பத்து நெறிகளையும் தெரிவிக்கின்றார்.

8ம் பாடலில் கருவூராரின் கருத்தைத் தெளிவித்த பின்னர், இப்பாடலில் கயிலாயமும் கருவூரும் இருக்கும் இடத்தை எண்ணிப் பார்க்கவும் சொல்லுகின்றார்.

**பராபரனார் ஆறுசொயம் பகர்ந்த சோதி :** பராபனாகிய கடவுள் ஆறு குணங்களையுடைய சோதியாவார் என்பதாகும். கடவுளின் ஆறு குணங்களாவன :

(1) சுயம்பு-தாமே எல்லாவற்றையும் செய்ய வல்லவர்.

(2) அநாதி-தாமே முதல்வராய் என்றென்றும் இருப்பவர்.

(3) அரூபி-ஐம்பொறி கொண்ட உருவில்லாமல் ஆவியாயிருப்பவர்.

(4) அதிகுணர்-நிலைபேறுடைய எல்லா நன்மைகளும் உடையவர்.

(5) சர்வவியாபி-எங்கும் நிறைந்திருப்பவர்.

(6) ஆதி-தாமே தாமாய் எல்லாவற்றிற்கும் ஆதிகாரணர்.

பின்வரும் பாடல் இக்குணத்தைப் புலப்படுத்துவதைக் காண்க.

"தன் வயத்தனாதல், முதலினாதல்,
தகும் பொறி உருவிலனாதல்,
மன் வயத்தெல்லா நலமுள னாதல்,
வயின்றொறும் வியாபகனாதல்,
பின் வயத்தின்றி ஒருங்குட னனைத்தும்
பிறப்பித்த காரணனாதல்,

பொன் வயத் தொளிர்வான் முதலெலா
உலகும் போற்றுமெய் இறைமையினிலேயே."

மேற்கூறப்பட்ட ஆறுகுணங்கள் உள்ளவரே பொன்னொளி வீசும் வானுலகு முதல் எவ்வுலகும் வணங்கத்தக்க மெய்க்கடவுள் என்பதாகும்.

**இரட்சணிய யாத்திரிகத்தில்** இந்த ஆறு குணங்கள் தெளிவாக்கப் பட்டுள்ளதைக் காண்க:

"**நீதி கருணை பரிசுத்த நேசஞ் சுயம்பு சாமர்த்தியம்**
போத மினைய லட்சணங்கள் பரிபூரணமாய்ப் பொருந்தியணு
ஏத மிலனாய்க் காமாதி யெறிந்து பவத்தை யெரிக்கின்ற
ஆதி தேவன் சரணநிழ லடைய வாரும் செகத்தீரே."

*இரட்சணிய நவநீதப்படலம்,2*

இந்த ஆறு குணங்கள் திரிமூர்த்திகளுக்கோ அல்லது பஞ்சமூர்த்திகளுக்கோ அல்லது முப்பத்து முக்கோடி தேவர்களுக்கோ பொருந்தி வரவில்லை என்பது வெளிப்படை. எனவே அவர்கள் மெய்க்கடவுள் ஆகார் என்பது அகத்தியர் முடிவு.

**ஒருவருமே நிகராத வஸ்துவப்பா :** கடவுளுக்கு யாரையும் எதனையும் எப்பொழுதும் எங்கும் ஒப்பிட்டுக் கூற இயலாது என்பதாம். வேதம் இதனைத் தெளிவாக வெளிப்படுத்துகின்றது.

"யாருக்கு என்னைச் சாயலும் சமமுமாக்கி, யாருக்கு நான் ஒப்பாகும்படிக்கு என்னை ஒப்பிடுவீர்கள்?". (ஏசாயா 46:5)

"இப்படியிருக்க தேவனை யாருக்கு ஒப்பிடுவீர்கள்?". (ஏசாயா 40:18)

"அதற்கு அவன்: நாளைக்கு என்றான். அப்பொழுது இவன்: எங்கள் தேவனாகிய கர்த்தருக்கு ஒப்பானவர் இல்லை என்பதை நீர் அறியும்படிக்கு உம்முடைய வார்த்தையின்படி ஆகக்கடவது" (யாத்திராகமம் 8:10)

"கர்த்தாவே, உமக்கு ஒப்பானவர் இல்லை; நீரே பெரியவர்; உமது நாமமே வல்லமையில் பெரியது". (எரேமியா 10:6)

தமது சுதந்தரத்தில் மீதியானவர்களுடைய அக்கிரமத்தைப் பொறுத்து, மீறுதலை மன்னிக்கிற தேவரீருக்கு ஒப்பான தேவன் யார்? அவர் கிருபை செய்ய விரும்புகிறபடியால் அவர் என்றென்றைக்கும் கோபம் வையார்." (மீகா.7:18)

திருவள்ளுவரும் :

"தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது" - *திருக்குறள், 7*

என்று இறைவரின் தன்னிகரற்ற நிலையைக் கூறினார்.

**திரிபொருளை அறிவினால் உணர்ந்து பார்த்து :** திரிபொருள் (Trinity) என்றதனால் கடவுள் தம்மை மனிதனுக்கு வெளிப்படுத்தியதில் தந்தையாகவும், மைந்தராகவும், பரிசுத்த ஆவியானவராகவும் வெளிப்பட்டமையைத் தெரிவிக்கின்றார்; இந்த வெளிப்பாட்டினை வேதத்தின் அறிவினால் உணர்ந்துகொண்டு, அதாவது திரித்துவத்தைக் குறித்து வேதம் கூறும் உண்மைகளை அறிந்து, நம்பி ஏற்றுக்கொண்டு உணர்ந்து பார்க்கவேண்டும் என்பதாம். இதனை **இரட்சணிய யாத்திரிகத்தில்** எ.ஆ. கிருஷ்ணபிள்ளை இவ்வாறு பாடுகின்றார்:

"தந்தையாகி, உலகனைத்தும் தந்து; மநுக்கள்
தமைப் புரக்க
மைந்தன் ஆகிப், புனிதாவி வடிவாய்
ஞான வரம் அருளிப்,
பந்தம் அற நின்று இலங்கும் திரியேக
பரமன் பதாம்புயத்தைச்
சிந்தை யாரத் தொழுது ஏத்திச்
சேரவாரும் செகத்தீரே

- *இரட்சணிய நவநீதப் படலம், 1*

கடவுள் மனிதனுக்குத் தம்மை வெளிப்படுத்தியதில், தந்தையாகி உலகங்களைப் படைத்தார் என்றும், பாவத்தில் விழுந்த மக்களை மீட்க மைந்தரானார் என்றும், பரிசுத்த ஆவியானவராக வந்து ஞானவரமருளினார் என்றும், அவர் பந்தம் ஏதும் இல்லாமல் விளங்கும் திரியேகக் கடவுள் என்றும் தெளிவுபடுத்திய பின்னர்: உலகத்தாரே மயக்கம் தெளிந்து அவரை மனமார ஆராதிக்க வாருங்கள் என்றும் அழைப்பும் விடுவிக்கின்றார் மீட்புக் கவிஞர்.

**தெரிசிப்பாய் நெறிபத்தும் தெரிசிப்பாயே! :** கடவுள் மனிதனை மீட்க வகுத்த மீட்பின் திட்டத்தில் இரண்டு ஏற்பாடுகளை வகுத்தருளினார். முன்னது பழைய ஏற்பாடு; பின்னது புதிய ஏற்பாடு. பழைய ஏற்பாட்டில் மக்களை ஆண்டு வழி நடத்துவதற்குக் கடவுள் வகுத்தருளிய பத்துக் கற்பனைகளே இந்தப் பத்து நெறிகளாகும். இவை முறையே யாத்திராகமம் 20:1-20 இல் எழுதப்பட்டுள்ளது காண்க.

1. "என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்." (யாத்திராகமம் 20:3)
2. "மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்". (யாத்.20:4)
3. "உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக; கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனை தண்டியாமல் விடார்". (யாத்.20:7).
4. "ஓய்வு நாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக" (யாத்.20:8).

5. "உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக" (யாத்.20:12).
6. "கொலை செய்யாதிருப்பாயாக" (யாத். 20:13).
7. "விபசாரம் செய்யாதிருப்பாயாக". (யாத்.20:14).
8. "களவு செய்யாதிருப்பாயாக" (யாத்.20:15)
9. "பிறனுக்கு விரோதமாய்ப் பொய்சாட்சி சொல்லாதிருப்பாயாக" (யாத்.20:16)
10. பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக; பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாத்திருப்பாயாக என்றார். (யாத்.20:17)

இந்தப் பத்துக் கற்பனைகளின் விளக்க விவரம் பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து ஆகமங்களில் அடங்கி இருக்கின்றது. கடவுள் இதனை எல்லா உலகத்தவருக்கும் என்று அருளாமல், தாம் தெரிந்து கொண்ட இஸ்ரவேல் மக்களுக்கென்றும், அவர்கள் வாயிலாக உண்மையான சமயத்தை, உலகத்தில் மக்கள் வாழ்க்கையில் இயேசு பெருமானின் வருகை வரையிலே நடைமுறையில் வைத்திருந்து முடிவாகத் தமது திருமைந்தர் வாயிலாகத் தம்மை பூரணமாக வெளிப்படுத்தவேண்டும் என்றும் திருவுளச் சித்தங்கொண்டார். பழைய ஏற்பாடு என்பது இந்தப் பத்துக் கற்பனைகளின் வாயிலாக யூத மக்களுடன், பின்னர் உலக மக்கள் எல்லாருடைய மீட்பையும் நோக்கி கடவுள் செய்த பழைய உடன்படிக்கையையும், அவர்கள் அந்த உடன்படிக்கையின் கீழ் வாழ்ந்த வரலாறுகளும் , அந்த வரலாற்றிலே உலகத்தில் வாழ்ந்த ஏனைய மக்களுடன் யூதர்கள்

தொடர்பு கொண்ட வரலாறுகளும், உலகப் படைப்பு முதற்கொண்டு, **பரமகுருவின்** வருகையை முன்னறிவித்து முடியும் மல்கியா ஆகமம் வரையிலும் நமக்குக் கூறப்பட்டுள்ளது.

பத்துக் கற்பனைகளை மையமாகக் கொண்டு பழைய ஏற்பாடு வெளிப்படுத்தும் மெய்க்கடவுளாகிய பரம்பொருளை நாம் அறிந்து தெளிவு பெறவேண்டும் என்று அகத்தியர் இரத்தினச் சுருக்கமாக இப்பாடலில் தந்துள்ளார். இதனை எபிரெய எழுத்தாளர் :

"பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன்" (எபிரேயர் 1:1) என்று கூறுகின்றார்.

## நம்மைப் படைத்தவரைத் தேட வேண்டும்

10. பிறிந்தவர்க்குப் பஞ்ச பட்சி குருவால் கண்டு
பிறிக்கறியார் பொய்யெனவே பேசுவார்கள்;
அறிந்தவர்க்கு மோட்சமுண்டு படைத்தோன் தன்னை
அறியாதார் எரிநரகிலழிந்து பேவாார்;
வெறிபிடித்த சிவன், பெருமாள், பிரமாதானும்
மேலான தேவரல்ல; மனிதர் அப்பா!
அறிவடைந்து நமைப் படைத்தோன் தன்னைத்தேட
அப்பனே புத்தியுள்ளோர்க்கு அறிவித்தேனே!

**(க-றை) :** நீங்கியவர்களின் வேளையின் நிலையினைப் பஞ்ச பட்சி குறி சாத்திரத்தின் மூலம் ஒரு குருவினிடத்தில் அறிந்து கொள்ள முற்படுதலில் உள்ள மெய்யையும் பொய்யையும் வேறுபடுத்தி அறியும் தகுதி இல்லாதவர்கள் நான் சொன்னதைப் பொய் என்றே பேசுவார்கள்; தன்னைப் படைத்த கடவுளை அறிந்தவனுக்கு மோட்சமுண்டு; அப்படி அறியாதவர்கள் எரி நரகில் அழிந்து போவார்கள்; வெறிபிடித்தவர்களாக விளங்கும்

சிவன், பெருமாள், பிரம்மா ஆகியோர் மேலான தேவர் அல்லர்; அவர்கள் வெறும் மனிதர் அப்பா! நல்லறிவடைந்து நம்மைப் படைத்த கடவுளைத் தேடும் புத்தியுள்ளவர்களுக்கு இதனை அறிவித்தேன் எ-று.

**(கு-றை) :** இந்தப்பாடல் பதிப்புரையில் குறிப்பிட்டுள்ள மூன்று பதிப்புகளிலும் இல்லை. தேவாதீனமாக இது திரு.என்.ஜெ.எஸ்.சிவசுந்தரம் இயற்றிய **முக்தி வழி** என்னும் நூலிலிருந்து கிட்டியது. **சிவன், பெருமாள், பிரமதானும் மேலான தேவரல்ல; மனிதர், அப்பா:** சிவன், பெருமாள், பிரம்மா முதலானோர் தேவரல்லர் மனிதரே என்பதை அகத்தியரோடு மற்ற சித்தர்கள் சிலரும் சிந்தனை செய்து கூறியிருக்கின்றார்கள்;

"மாலும் மனிதன் மலரோனும் தான் மனிதன்
ஆலமுண்டகண்டன் அவன் மனிதன்-சீலமுடன்
உற்று உணர்ந்த உகந்த பெரியார்
கற்று மறிந்தாரில்லை காண்." – *ஔவை*

"பலகலைகளோ துவகை நாலுந்தானும்
பண்ணியதோர் நால் வேதமாறு சாஸ்திரம்
அலையுடனே தத்துவங்கள் தொண்ணூற்றாறும்
அவைகளிலே பொய் களவு அதர்மஞ்சேரும்
மலையரசன் சிவன், பிரமா, விஷ்ணு தானும்
மாசில்லா நாதருட வழியுங்காணார்
நிலைபெருக மோட்சவழி காணாதாலே
நீதியற்ற மனிதரென்று நிகழ்த்தினோமே."

– *திருமூலர்*

**அறிவடைந்து நமைப் படைத்தோன் தன்னைத்தேட அப்பனே புத்தி யுள்ளோர்க்கு அறிவித்தேனே :**

"கனம் பொருந்தியவனாயிருந்தாலும் அறிவில்லாத

மனிதன் அழிந்துபோகும் மிருகங்களுக்கு ஒப்பாயிருக்கின்றான்" (சங்கீதம் 49:20)

பமர குருவும், "தேடுங்கள் கண்டடைவீர்கள் என்றார்" (மத்தேயு.7:7)

"மனித இனமான சகல மக்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றபண்ணி, பூமியின் மீதெங்கும் குடியிருக்கச்செய்து, முன் தீர்மானிக்கப்புட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்;

கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாகத் தம்மைத் தேடும்படிக்கு அப்படிச் செய்தார்; அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே. (அப். 17:26-27)

புத்தியுள்ள மக்கள் தங்களைப் படைத்த **மெய்ப்பொருளைத் தேடி** அறிவார்களாக என்கிறார் அகத்தியர். **மெய்ப்பொருளை** மூடத்தனமாக நாம் ஏற்றுக் கொள்ளவில்லை; நாம் அவ்வாறு ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கடவுளும் விரும்பவில்லை. கடவுள் மனிதனைப் படைத்தபோது அவனுக்கு அருளிச்செய்த அறிவு வரத்தால் அவரைத்தேடி அறிந்து கொள்ளவேண்டும் என்று விரும்புகின்றார். எனவேதான் **பரமகுருவும்**, வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் நித்திய வாழ்வு உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே" (யோவான் 5:39) என்று கூறுகின்றார்.

## கயிலாயம் போக இயலுமா?

11. சங்கமதில் பரப்பிரமம் ஒன்றைப் போற்றி,
சகல பவம் தீர நன்மைதனையே சாற்றி,
துங்கமுறும் இலிங்கம் என்றும் பூசை செய்து
சுணை கெட்ட மாடப்பா சாம்பல்பூசி

எங்கணும் போய்ச் சிவசிவ என்று அலைந்து, ஏங்கி,
எரி நரக அலகை செய்யும் இடர் எண்ணாமல்
பொங்குதிரை கடல் முழ்கித் தீட்சை பெற்றால்
புகழ்கிரியாம் கயிலாயம் போகலாமோ?

**(க-ரை) :** சங்கத்தில் பரப்பிரமம் ஒன்றையே போற்றுவதாக எண்ணி, சகல பாவங்களும் தீர்வதற்கு நன்மையே செய்து, இலிங்கத்தை பூசை செய்து (திரிவது) சுணை கெட்டமாட்டின் நிலையாகும்; எரிநகரத்திற் கென்று நியமிக்கப்பட்டியிருக்கும் சாத்தான் செய்யும் இடர்களை எண்ணாமல் உடம்பெல்லாம் சாம்பல் பூசி, சிவ சிவ என்று எங்கும் கூறிக்கொண்டு அலைந்து திரிந்து, பொங்கும் அலைகளை உடைய கடலில் மூழ்கித்தீட்சை பெற்றால் புகழ் மலையாம் கயிலாயம் சென்று அடைய இயலுமா? இயலாது என்பதாம்.

**(கு-ரை) : மெய் பரம்பொருளை** அறியாமல் மனித விருப்புடன் செய்யப்படும் பூசை முதலான ஆசாரங்களால் முக்தி அடைய இயலாது என்பதை **அகத்தியர்** இப்பாடலில் தெளிவுப் படுத்துகின்றார்.

## செய்ய வேண்டாதவை

12. போக ஒரு தடையுண்டோ அந்த நாட்டில்
போவதற்குப் பொய்கைதனில் முழுக வேண்டா;
சாகமுண்டு தலை கீழாய் நிற்க வேண்டா
சத்தலிங்க மலர் எடுத்துச்சாத்த வேண்டா;
தாகமுடன் தீ வளர்த்துக் குதிக்க வேண்டா;
தாரணியில் பலபேயைத் தொழவும் வேண்டா;
ஏகனென்று பிரமாவை நாட வேண்டா;
இந்த நூல் பார்த்து அறிவீர் இன்பமாய்த் தானே;

**(க-ரை) :** அந்த நாட்டிற்கு போவதற்கு தடை ஏதும் உண்டோ? அங்கே போவதற்கு பொய்கையில் முழுக வேண்டாம்; இலைக்கறி உண்டு தலை கீழாய் நின்று தவம் செய்ய வேண்டாம்; மலர் எடுத்து லிங்கத்திற்கு இட்டு போற்றவும் வேண்டாம். தீ வளர்த்துக் குளிக்கவும் வேண்டாம்; பிரம்மாவை கடவுள் என்று விரும்பவேண்டாம்; இந்த நூலில் உள்ள எல்லாச் செய்திகளையும் ஆராய்ந்து பார்த்து இன்பமாய் அறிந்து கொள்ளுங்கள்.

**(கு-ரை) :** தற்காலத்தில் தமிழ் உரைநடையின் தந்தை என்று போற்றப்படும் தமிழ்ப் பெரியார் திரு.வி.கலியாணசுந்தரனார் பின்வரும் பாடல்களில் கிட்டத்தட்ட இதே கருத்தைக் கூறுவதைக் காணலாம்:

"மலரைப் பறிக்கிலென், மாலைப் புனைந்திலென்,
மந்திரத்தின் ஒலியைப் பெருக்கிலென், ஓவெனப்
பாக்களை ஓதிலென்ன! சிலுவையும் ஆணியும் செந்நீரும்
சேர்ந்த திருவுருவம்
பொலியும் உளத்தினில் பொன்றிடும் பாவப்பொருப்புகளே
வாக்கை அடக்கின் வயிற்றை ஒடுக்கின் மயிர்வளர்த்து
மூக்கைப் பிடித்திடின் மூச்சைத் தடுத்திடின் முக்தியின்பம்
தேக்குமோ ஐயோ செகத்தீர்! அடைமின் சிலுவை உயிர்
போக்கிய ஏசுவின் பொன்னடி இன்பம் புகுந்திடுமே."

*கிறிஸ்துவின் அருள்வேட்டல் : அறத்தின் இயல்*

மக்கள் முக்தி நாடடைய செய்ய வேண்டாதன எவை, செய்ய வேண்டியன எவை என்பதைத் தமது நூலைப்பார்த்து இன்பமாய் அறிந்து கொள்ளுமாறு **அகத்தியர்** விரும்பி கூறுகின்றார்.

## அன்பாகத் திறந்து விட்டேன்

13. இன்பமாய் நால்வேதம் வந்தவாறு
எழுதினார் வேதவியா சாத்தான் போல
அன்பாகப் பலவிதத்தில் கட்டிப் போட்டார்;
அதினாலே மானிடர்கள் கெட்டுப்போனார்.
முன்போலச் சித்தர் எல்லாம் கொஞ்சம் கொஞ்சம்
மூடினதை திறந்து விட்டார்; முடுகி நானும்
அன்பாகத் திறந்து விட்டேன் வெளிச்சமாக
அரனார் உத்தரப்படி அறிவித்தேனே.

**(க-ரை) :** நான்கு வேதங்கள் வந்த வரலாற்றைக் கேட்பதற்கு இன்பமாக இருக்குமாறு வேதவியாசர் சாத்தான்போல எழுதிவிட்டார்; அதனால் மக்கள் கெட்டுப் போனார்கள். எனக்கு முன்னர் சித்தர்கள் எல்லாம் மூடிகிடந்த மெய்ப்பொருளைக் கொஞ்சம் கொஞ்சம் திறந்துவிட்டனர். நான் கடவுளின் உத்தரவின்படி விரைந்து எல்லாவற்றையும் வெளிச்சமாகும்படி அன்பாகத் திறந்து விட்டேன்.

**(கு-ரை) :** வேறோர் அகத்தியர் பெயரில் அமைந்திருக்கும் இன்னும் ஒரு பாடலையும் காண்க :

"பாரப்பா நால்வேத நூலும்பாரு
பற்றாசை வைப்பதற்கு ஒப்பனையோ கோடி
வீரப்பா ஒன்றொன்றுக் கொன்றைமாற்றி
வீணிலே அவர் பிழைக்கச் செய்த மார்க்கம்
தேரப்பா தெருத் தெருவே புலம்புவார்கள்
தெய்வநிலை ஒருவருமே காணார் காணார்;
ஆரப்பா நிலையில் நிற்கப் போறா ரையோ
ஆச்சரியங் கோடியிலே ஒருவன்தானே."

**முன்போலச் சித்தரெல்லாம் கொஞ்சம் கொஞ்சம் மூடினதைத் திறந்துவிட்டார் :** 3, 4, 5, 6, ஆகிய பாடல்களில் பதினெண் சித்தர்களுள் கிட்டத்தட்ட 7 பேர் எவ்வாறு கடவுள் நம்பிக்கையின்பாற்பட்ட மக்களுடைய மூடப்பழக்கவழக்கங்களை அங்குமிங்குமாக வெளிப்படையாகக் கடிந்து கூறி மக்களுடைய மனத்தைச் சிந்திக்க வைக்க முற்பட்டதைக் கூறினார். இந்தப்பட்டியலில் சிவவாக்கியர். திருமூலர், போகர், முதலானவர்களையும் இணைத்துக் கொள்ளலாம்.

**முடுகிநானும் அன்பாகத் திறந்துவிட்டேன் வெளிச்சமாக; அரனாருத்தரப்படி அறிவித்தேனே.** ஏனைய சித்தர்கள் அரைகுறையாக மறைந்து கிடந்த மெய்ப்பொருளைத் திறந்து காட்டினார்கள்; ஆனால், கடவுள் என்னைத் தமது அன்பால் ஆட்கொண்டது மட்டுமல்லாமல் மெய்ப்பொருளை வெளிச்சமாகத் திறந்து காட்டும்படி எனக்குக் கட்டளையும் கொடுத்தார்; எனவே நான் இவற்றை அறிவித்திருக்கிறேன் என்கிறார் **அகத்தியர்.**

மெய்ப்பொருளால் ஆட்கொள்ளப்பட்ட **அகத்தியர்** "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்று உணர்ந்து சத்தியத்தை அறிவிக்கமுற்பட்டது ஒரு புறமிருக்க; தம்மைத் தடுத்து ஆட்கொண்ட பரம்பொருளே சத்தியத்தை அறிவிக்க தமக்கு ஆணையிட்டமை யையும் கூறுகின்றார். இதனை 21 ஆம் பாடலில், "சிவன் பேரில் ஆணைப்படி சொல்லிப்போட்டேன்" என்கிறார். தமது நூலின் முடிவில், "பரமகுரு சொன்னபடி பாடினேனே" (30) என்று அறுதியிட்டு உரைக்கின்றார். பரம்பொருளாம் கிறிஸ்து விண்ணுலகம் செல்வதற்கு முன்னர் அருளிச்செய்த பெரிய கட்டளையை இங்கு இணைத்து எண்ணி, கடவுளின் ஆணையைத் தெளிக.

"அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி; வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக்

கொடுக்கப்பட்டியிருக்கிறது. ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய், சகல நாட்டவரையும் சீடராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள், இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார் ஆமென்" மத்தேயு 28:18-20.

### அறிவை அழித்துவிடக்கூடாது

14. அறிவித்தேன் என்று சொன்ன வார்த்தை கேட்டு,
ஐயையோ உலகத்தில் அநேகம் பேர்கள்,
பொறியான அறிவு மிக அழிந்து போனார்;
புலத்தியனே நினைத்துப்பார்; பொய்யோ மெய்யோ!
நெறியான பூசை தினம் செய்திட்டாலும்
நிமல பதம் காண்பாரோ நிசமதாக
அறிவான தழிந்திட்டால் அப்பா! அப்பா!
அலகை வசம் ஆவதுவும் அறிக்கைதானே.

**(க-ரை) :** நான் இவ்வாறு மெய்ப்பொருளை அறிவித்தேன் என்று சொன்ன வார்த்தையைக் கேட்டு, அநேகர் தங்கள் அறிவினை இழந்து அழிந்தனர்; (நான் கூறியது மெய்யா, பொய்யா என்று ஆராய்ந்து பார்க்காமல் அந்நிலைக்கு ஆளாயினர்); ஆனால், ஞானமுள்ளவனே, நான் கூறியது மெய்யா, பொய்யா என்று நீ சிந்தித்துப்பார். நாள்தோறும் நெறிதவறாமல் பூசை செய்தாலும் நிசமாக வீடு பேற்றினை அடைவார்களோ? அப்படி மெய்யறிவு அழிந்து போனால் சாத்தானின் வசம் ஆவது வெளிப்படையாகத் தெரிவதுதானே!

**(கு-ரை) : அறிவித்தேன் என்று சொன்ன வார்த்தை கேட்டு ஐயையோ உலகத்தில் அநேகம் பேர்கள் பொறியான அறிவு மிக**

**அழிந்துபோனார்.** "கடவுளின் ஆணையின்படி மெய்ப்பொருளை அறிவிக்குங்கால் மக்கள் மெய்ப்பொருளை நம்பி மோசம்போன வழிவகைகளை எல்லாம் தெளிவாக அறிவித்தேன் இதனால், நான் அறிவித்த சத்தியப்பொருளை உண்மையான மனத்துடன் நிதானித்துக் காணவிரும்பாத உலக மக்கள் பலர் தங்களுடைய நல்லறிவை இழந்து விட்டார்கள் என்று **அகத்தியர்** அறிவிப்பதினால், அவர் காலத்தில் அவர் நாட்டில் நிலவியிருந்த பொய்யைக் களைந்து மெய்ப்பொருளை அறிவித்தபோது பலர் அந்த உண்மையை ஒப்புக்கொள்ள விரும்பாததால் தங்கள் மெய்யறிவை இழந்தனர் என்பதைப் பின்னர் நமக்கு இங்கு பாட்டில் வடித்துத் தருகின்றார். இதன் விளைவாக **அகத்தியர்** பல இடர்பாடுகளுக்கும் துன்பங்களுக்கும் உள்ளாகி இருக்கவேண்டும் என்பது தெளிவு. ஒப்பு நோக்கு பாடல் 19.

**புலத்தியனே நினைத்துப் பார் பொய்யோ மெய்யோ!** தாம் கூறுவது பொய்யா, மெய்யா என்பதை நினைத்து, சிந்தித்து ஆராய்ந்து பார்க்குமாறு **அகத்தியர்** சவால் விடுக்கின்றார். பொய்வழியில் வாழும்போது மெய்வழி உபதேசம் கிடைத்து, அது மனிதர் வாழும் வாழ்வு பொய்வழியினது என்று காட்டுமானால் உணர்ச்சிவயப்பட்டு கோபமடையக்கூடாது; அறிவை இழக்கக்கூடாது; தன்னைத்தேடி வந்த சத்தியத்தின் ஒளியில் அறிவுடனும் காரணகாரியத்துடனும் உண்மையைத் தெளிதல் வேண்டும். எது பொய், எது மெய் என்பதைத் தெளிதல் மனித அறிவின் கடமையாகும். சற்குருநாதரும், "சத்தியத்தையும் அறிவீர்கள்; சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" என்றார். (யோவான் 8:32).

திருவள்ளுவரும் கூறுகின்றார்;

"எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

*- திருக்குறள் 355*

**அறிவான தழிந்திட்டால் அப்பா அப்பா அலகைவசம் ஆவதுவும் அறிக்கை தானே!** மக்கள் மெய்யறிவை இழந்துவிட்டால் அவர்கள் அலகையாகிய சாத்தானின் வசமாகி விடுவார்கள். திருவசனம் அறிவினை திறவுகோல் (லூக்கா 11:52) என்கிறது. இதனைத் தக்கவாறு பயன்படுத்தி மெய்ப்பொருளை அறிதல்தான் அறிவின் மேன்மையாகும். மெய்யறிவை நித்திய வாழ்வாம். யோவான் 17:3, "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தி ஜீவன்."

"அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷயங்க ளெல்லாம் அடங்கியிருக்கிறது" (கொலோசெயர் 2:3). சிலர் மெய்யறிவைப் போற்றாமல் தங்களைக் கெடுத்துக் கொண்டதைத் திருவசனம் தெளிவுப்படுத்துகின்றது. தேவனைக்குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்பட்டி யிருக்கிறது; தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்.

"அவர்கள் தேவனை அறிந்தும் அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும், தோத்திரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனை களினாலே வீணரானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது.

"அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனிதர்கள் பறவைகள் மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள் (ரோமர் 1:19, 21, 23).

மக்கள், சத்தியத்தினைப் பகுத்தறிவும் தங்கள் அறிவுக் கண்களைச் சாத்தான் குருடாக்கும்படி விடக்கூடாது என்பது **அகத்தியர்** எச்சரிக்கை!

"தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனத்தைக் குருடாக்கினான்". (2 கொரிந்தியர் 4:4)

இந்தப்பாடலில் அகத்தியர் மக்கள் நல்லறிவினை இழக்கக் கூடாது என்றும், அவ்வாறு இழந்தால் அது மக்களைச் சாத்தானின் வசமாக்கிவிடும் என்றும் உணர்த்துகின்றார்.

## நினைத்துப் பாருங்கள்

15. அலகையது தேவனுக்குச் சரியாய் நின்று,
ஆங்காரம் தானெடுத்து அகந்தையாலே,
நிலைகுலைந்து பாதாளக் குழிக்குள் நின்று,
நித்தியமும் மானிடரை மோசம்போக்கி,
பலகலையும் உணர் அறிவை மயக்கித் தங்கள்
பாதாள வீடதிலே பதுங்கச் செய்யும்
நிலையதுவை அறியாமல் போறார் போறார்
நினைத்துப்பார் புலத்தியனே நிசமாய்த்தானே.

**(கு–ரை) :** சாத்தான் தன்னுடைய அகந்தையாலே தன்னை தேவனுக்குச் சரியாய் உயர்த்தினான்; அதனால், தன்னுடைய மேன்மையான நிலைகுலைந்து பாதாளக் குழிக்குள்ளே தள்ளப்பட்டான். அவன் தான் கெட்டது மட்டுமல்லாமல், மக்களையும் ஒவ்வொரு நாளும் மோசம் போக்கி, அவர்களுடைய பல கலையும் கற்று உணரும் அறிவினைக் கட்டுக்கதைகளாலே மயக்கி நரக பாதாளத்திலே தன்னோடு இழுத்துக் கொள்ளுகிறான்; இந்நிலையினை மக்களும் அறியாமல் மோசம் போகிறார்கள். அறிவுள்ளவனே நான் சொல்வது உண்மையான செய்தி; சிந்தித்துப்பார்.

**(கு-ரை) : அலகையது தேவனுக்குச் சரியாய் நின்று, ஆங்காரம் தானெடுத்து அகந்தையாலே, நிலைகுலைந்து பாதாளக் குழிக்குள் நின்று :** சாத்தான் ஆணவத்தால் தன்னைத் தேவனுக்குச் சரியாக நிறுத்தினான்; விண்ணுலகத்திலே ஒரு தலைமையானத் தூதனாக இருந்தவன் தனது பெருமையினாலே தன்னைத் தேவனுக்கு நிகராக உயர்த்தினான்; பரலோகத்தில் தேவனுக்கு விரோதமாய்க் கலகம் செய்தான்; அதனால் அவனையும் அவனைச் சார்ந்த தூதர்களையும் தேவன் பாதாளக் குழிக்குள்ளே -நரகத்திலே தள்ளி விட்டார். பின்வரும் வேதத்திருவசனங்கள் சாத்தானுடைய அகந்தையையும் கலகத்தையும், அவன் அடைந்த தண்டனையையும் தெளிவுபடுத்துகின்றன; தேவ தூதனாக இருந்தபோது சாத்தானுடைய முதல் பெயர் லூசிபர் என்பதாகும்.

"அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியே, நீ வானத்திலிருந்து விழுந்தாயே! மக்கள் இனங்களை ஈனப்படுத்தினவனே, நீ தரையிலே விழவெட்டப்பட்டாயே! நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்; வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும், நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களிலே ஏறுவேன்; உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்றும் நீ உன் இருதயத்தில் சொன்னாயே" (ஏசாயா 14:12-14).

நரகம் சாத்தானுக்காகவும் அவனுடன் சேர்ந்து துரோகம் செய்த தூதர்களுக்காகவும் உண்டாக்கப்பட்டது. "அப்பொழுது, இடதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர்: சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப் பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள் ........... என்றார்." (மத்தேயு. 25:41).

"தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக் கொள்ளாமல் தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களையும் மகா நாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி, அந்தகாரத்தில் அடைத்து வைத்திருக்கிறார்." (யூதா 6)

"நரகம் மனிதனுக்காகப் படைக்கப்பட்டதன்று. ஆனால் மனிதன் சாத்தானுக்குச் செவிக்கொடுத்து தேவனுக்குக் கீழ்ப்படியாமல் தேவனுடைய அன்பைப் புறக்கணித்துப் போகும்போது நித்திய தண்டனையைத் தானாகவே சம்பாதித்துக் கொள்ளுகின்றான்.

"சாத்தான் இங்கு அலகை என்று அழைக்கப்பட்டுள்ளான். சாத்தான் என்பதற்கு, எதிர்க்கிறவன் அல்லது பகைஞன்" என்று பொருள். பிசாசு என்னும் பெயரும் சாத்தானுக்கு உண்டு. பிசாசு என்பதற்கு "குற்றஞ்சாட்டுபவன், நிந்தனைக்காரன்" என்று பொருள் (வெளி.12:10)

ஆதாம், ஏவாள் முதலாக நித்தமும் வஞ்சித்து ஏமாற்றி வருகின்றான். பாவத்திற்கும் மரணத்திற்கும் ஏனைய எல்லாத் துன்பத்திற்கும் அவர்களை அடிமைப்படுத்தி விட்டான். "எல்லாரும் பாவஞ்செய்து தேவ மகிமையற்றவர்களாகி." (ரோமர் 3:23).

சாத்தானுடைய வஞ்சகத்திற்கு உட்பட்ட மானிடம் தேவனுடைய ஐக்கியத்தை இழந்து பாவத்திற்கும் அதன் விளைவான நித்திய மரணம் அல்லது ஆத்தும அழிவிற்கும் இலக்கானது. அநித்திய மாமிசத்தின் வாழ்விற்கு நித்திய ஆத்துமாவை அடிமைப்படுத்திவிட்ட சாத்தான், உடலின் விருப்பங்களை நிறைவேற்றுவதிலும் சிற்றின்பத்திலும் நாட்டத்தைத் திருப்பி மக்களை மோசம் போக்கினான். கடவுள் படைத்த மண்ணின் வாழ்வோடு மனிதனை இணைத்து இறுகக் கட்டி கண்களின் விருப்பம், மாமிசத்தின் விருப்பம், வாழ்வின்

பெருமை என்னும் மூவகைளில் மக்களை மோசம் போக்கி (1 யோவான் 2:15-17) அவர்களுடைய பக்தி முதலான-வற்றையுங்கூட இவற்றின் அடிப்படையிலே ஏமாற்றி வஞ்சித்துவிட்டான். இதனால்தான் இந்த உலக வாழ்வை இரட்சணியக் கவிஞர் "வஞ்சமே பயில பிரபஞ்சவனம்" என்றார்.

(*இரட்சணிய யாத்திரிகம் : மெய்யுணர்ச்சிப் படலம் - 1*)

**பலகலையும் உணர் அறிவை மயக்கித் தங்கள் பாதாள வீடதிலே பதுங்கச்செய்யும் நிலையதுவை அறியமாமல் போறார் போறார்;** உடலின் சிற்றின்ப விருப்பங்களாலும் அவற்றின் அடிப்படையில் தோன்றிய மாமிசத்திற்குரிய ஆராதனைகளாலும் ஆவிக்குரிய மெய்யறிவை மயக்கி மக்கள் மனத்தைக் குருடாக்கி விட்டான். (II கொரி.4:4)

**நினைத்துப்பார் புலத்தியனே நிசமாய்த்தானே :** புலத்தியனே, இதனைப் படிக்கும் அறிவுள்ளவனே நீ நிச்சயமாக இதனை நினைத்துப்பார்; ஆராய்ந்து சிந்தித்துப் பார்; ஆன்மிக அறிவு தெளிவு பெறுவாய் என்கிறார் **அகத்தியர்**.

## நிலையான ஞானக் கண்ணொளி

16. நிசமான நால்வதேம், ஆறு சாஸ்திரம்
நினைவதுவை மயக்கி வைக்கும் புராண சாஸ்திரம்
வசமாக நால் மதத்தில் வந்த சாஸ்திரம்
மற்றமற்ற சாஸ்திரத்தின் வசமீதெல்லாம்
குசமசக்குக் குசமசக்கு அப்பா! அப்பா!
கூறுகிறேன் சுயவேத சாஸ்திரந்தன்னை,
நிசமாய் நம்பின பேர்க்கு ஈடேற்றமுண்டு;
நிலை ஞானக் கண்ணொளியு நிற்குந்தானே.

**(க–ரை) :** நான்கு வேதங்கள், ஆறு சாஸ்திரங்கள், மனிதரின் நினைவை மயக்கும் புராணங்கள், நான்கு மதங்களில் தோன்றிய சாஸ்திரங்கள், இன்னும் தோன்றிய ஏனைய சாஸ்திரங்கள் எல்லாம் பொய்யும் புரட்டும் வீண்மயக்கமாகும் அப்பா! கூறுகின்றேன்: சுயவேத சாஸ்திரத்தை உண்மையாக நம்பினவர்களுக்கு ஈடேற்ற முண்டு; அவர்களுக்கு நிலையான ஞானக் கண்ணொளியும் நிற்கும் என்றவாறு,

**(கு–ரை) :** பகுத்தறிவுள்ள மெய்யறிவின் துணைகொண்டு சுய வேத சாத்திரத்தின் அடிப்படையில் அகத்தியர் மெய்ப்பொருளைத் தேடிக் கண்டடைந்தபோது, தாம் அதற்கு முன்னர் அறிந்திருந்த எல்லாம் குசமசக்கு அதாவது மயக்கத்திற்குரிய பொய்யே என்று துணிகின்றார். இதனைக் கேட்பதற்குக் கடினமாக இருந்தாலும், உண்மையை உணர்ந்த மனம், இதுகாறும் தமது நம்பிக்கைக்கு ஆதாரமாக இருந்த வேதங்களையும் சாத்திரங்களையும் பிறவற்றையும் பொய் என்றும் மயக்கத்திற்குரியவை என்றும் கூறுவதில் வியப்பில்லை.

மகாகவி எ.ஆ. கிருஷ்ணபிள்ளையின் அனுபவமும் இதற்கிசைய இருப்பதைக் காணலாம்; அவர் தாம் கிறிஸ்தவரான வரலாற்றில் கூறுகின்றார்:

"சில காலம் பொறுத்து ஒரு தமிழ் வேதாகமத்தை உபாத்தியாயர் ஒருவரிடத்தில் இரவலாக வாங்கி ஆதி தொடங்கி வாசிக்க ஆரம்பித்தேன். யாத்திராகமம் இருபதாம் அதிகாரம் மட்டும் ஒழுங்காய் வாசித்தேன். வாசித்த அளவில், உலக சிருஷ்டிப்பு, பாவம் வந்த வகை, ஜலப்பிரளய விர்த்தாந்தம் முதலியவைகள் எல்லாம் உண்மையாய் நடந்தபடியே எழுதி இருக்கிறதென்றும், சைவ வைஷ்ணவ சமய நூல்களிற் சொல்லியிருக்கிற அவ்வகையான விர்த்தாந்தங்கள் எல்லாம் முழுக்கட்டுப்பாடும்,

பழங்கதைகளும் வேடிக்கையார்த்தமாய்ப் புனையப்பட்டவைகளு மாயிருக்கிறதென்றும் மனதில் தெளிவாய்ப்பட்டது."

*எ.ஆ.கி., நான் கிறிஸ்துவைக் கண்ட வரலாறு, பக்.19.*

**நால்வேதம் :** இருக்கு, யசுர், சாம, அதர்வணம் என வேதம் நான்கு. இவற்றின் தோற்றம் 13ஆம் பாடலில் கூறப்பட்டது.

**ஆறு சாஸ்திரம் :** இந்தச் சாத்திரங்களை மூன்று என்றும் ஆறு என்றும் கூறுவர். சாங்கியம், பதஞ்சலியம், வேதாந்தம் இவற்றை ஒரு பிரிவாக்குவார்.

அடுத்த பிரிவில் ஆறு சாத்திரங்கள் : 1) வேதாந்தம், 2) வைசேஷிகம், 3) பாட்டம், 4) பிரபாகரம், 5) பூருவ மீமாம்சை, 6) உத்தரமீமாம்சை என்பன.

வேதங்களையும், சாத்திரங்களையும் ஆராய்ந்த தமிழ் ஞானிகள் சிலர் அவற்றை கடிந்துரைத்துள்ளமையைக் காண்க:

**அகத்தியர் ஞானம் 3-ல் 4ஆம் பாடல் :**

"தயங்காமற் பிழைப்பதற் குயிந்த ஞானம்
சார்வாகப் பாராட்டி யின்னம் வேறே
மயங்குவதற்கு ஞானம் பார் முன்னோர் கூடி
மாட்டினார் கதை காவிய புராண மென்றும்
இயலான ரசம்தனிலே ஈப்புகுந்தற்போலும்
இசைந்திட்டார் சாஸ்திரங்கள் ஆறென்றேதான்
வரையான பயன் பெறவே வியாசர்தானும்
மாட்டினார் அரனார் உத்தரவினாலே."

(மேற்கோள் : *முக்தி வழி, பக்.232)*

**பத்திரகிரியார் - 156 :**

"சாஸ்திரத்தைச் சுட்டு சதுர் மறையைப் பொய்யாக்கி சூத்திரத்தைக் கண்டு சுகம் பெறுவதெக்காலம்."

*(ஷை., பக்.233)*

**திருமூலர் விருத்தம் :**

"பல களைகளோது வகை நாலுந்தானும்
பண்ணியதோர் நால் வேதமாறு சாஸ்திரம்
அலையுட னேயஞ் செழுத்து வெளியுந்தானு
மவைகளிலே பொய் களவு அதர்மஞ்சேரும்
மலையரசன் சிவன் பிர்மா விஷ்ணு தானும்
மாசில்லா நாதருட வழியுங் காணார்
நிலைபெருக மோட்ச வழி காணாதாலே
நீதியற்ற மனிதரென்று நிகழ்த்தினோமே."

*(ஷெ., பக்.350)*

**நினைவதுவை மயக்கி வைக்கும் புராண சாஸ்திரம் :** மும்மூர்த்திகள் மீது பாடப்பட்டவை. ஒவ்வொருவருக்கும் அவ்வாறு புராணங்களாகப் பதினெட்டுப் புராணங்கள் உண்டு என்பர். மகாபுராணம், உபபுராணம் என்றும் இவற்றைப் பிரிப்பர். புராணங்கள் பதினெட்டாவன : 1) பிரமம், 2) பதுமம், 3) வைணவம், 4) சைவம், 5) பாகவதம், 6)பௌடிகம், 7) நாரதீயம், 8) மார்க்கண்டேயம், 9) ஆக்கினேயம், 10) பிரமணவ வர்த்தம், 11) இலையங்கம், 12) வராகம், 13) வாமனம், 14) கூர்மம், 15) மச்சியம், 16) காரூடம், 17) காந்தம், 18) பிரமாண்டம் என்பன.

**வசமாக நால் மதத்தில் வந்த சாஸ்திரம், மற்றமற்ற சாஸ்திரத்தின் வசமீதெல்லாம் :** நாட்டில் அறுவகை சமயங்கள் உண்டு. அவை :

1) சைவம், 2) வைணவம், 3) சமணம், 4) பௌத்தம், 5) சார்வகம் (மாயாவதி மதம்), 6) உலகாயதம். இவற்றுள் பௌத்தம் கடவுள் கொள்கை இல்லாதது. உலகாயத மதமும் கடவுள் கொள்கை இல்லாதது. இவைபோக ஏனைய நான்கு மதங்களில் தோன்றிய சாத்திரங்கள் முதலான எல்லாவற்றையும் குறித்துக் காட்டுகின்றார்.

தம் நாட்டுச் சமயங்களிலும் சாத்திரங்களிலும், வேதங்களிலும், தொண்ணூற்றாறு தத்துவங்களிலும் மெய்ப்பொருளாம் பரம் பொருளைத் தேடிக் காணாத வேதநாயக சாத்திரியார்;

"சமயம் ஈராறோர் ஆறு சாத்திரங்கள் வேத நான்கும்
அமையும் தத்துவம் தொண்ணூற்றாறும் (ஆறும்)
கடந்தோன்."

என்று அறுதியிட்டு உரைக்கின்றார்.

**நிலைஞானக் கண்ணொளியும் நிற்குந்தானே :** பரமகுருவாகிய கிறிஸ்துவே மனுக்குலத்தின் நிலையான ஞானமாக இருக்கின்றார். "அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்" (1 கொரி.1:31). கிறிஸ்துவுக்குள் மக்களுக்கு வேண்டிய சகலமும் அடங்கியிருக்கிறது. "அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கின்றன." (கொலோ.2:3). வேதத்தின் திருவசனங்களும், இவை வெளிப்படுத்தும் உலகத்தின் ஒளியாகிய இயேசு கிறிஸ்துவும் ஆன்மாக்களுக்கு நிலையான ஞானக் கண்ணொளியைத் தரும் வழியைக் காட்டுகின்றார் அகத்தியர் இப்பாடலில்.

## கரை ஏறவேண்டும்

17. கண்ணீரைத் தான்விட்டு உள் அசுத்தம் போக்கி
காரண சற்குருவினால் கசட்டைப்போக்கி,
வெண்ணீராம் ஆதித் திரு வேதாந்தத்தின்
வீடேக வேணும் என்றால் விரும்பிக்கேளு
தண்ணீரை உருவேற்றித் தியானம் செய்து
சச்சிதானந் தனையே சரணம் செய்து
கண்ணீரை விட்டமுது கசட்டைப் போக்கி
கரை ஏறவேணும் இதைக் கைக்கொள்வீரே!"

**(க-ரை) :** ஒளி பொருந்திய திருவசனங்களாகிய ஆதித்திருவேதம் வெளிப்படுத்தும் வீடுபேற்றினை அடைய வேண்டும் என்றால், நான் சொல்லுவதைக் கேளுங்கள்; வாழ்க்கையில் செய்த தவறுகளுக்காக மனம் வருந்தி கண்ணீர் சிந்தி அழுது, உள்ளத்தினின்று அவ்வசுத்தங்களை நீக்கி மனம் திரும்பவேண்டும்; சச்சிதானந்தனாகியக் கடவுளிடம் சரண் அடைந்து, அவரையே தியானம் செய்து குற்றங்களுக்காகக் கண்ணீர்விட்டு அழுது தண்ணீரில் திருமுழுக்குப் பெற்றுக் கரை ஏறவேண்டும்; முதல் காரணமாக விளங்கும் சற்குருவினால் களங்கத்தைப்போக்க வேண்டும்; இதைக் கைக்கொள்ளுங்கள்.

**(கு-ரை) :** இப்பாடலில் மக்கள் ஈடேற்றம் அடைவதற்குரிய வழி வகைகளை உணர்த்துகின்றார்.

கிறிஸ்துவை நம்பி உள்ளத்தில் அவரைத் தன் மீட்பராக ஏற்றுக்கொண்ட ஆன்மா, அவருடைய சிலுவை மரணத்திற்குக் காரணமாக இருந்த தன்னுடைய பாவங்களை நினைத்து மனம் வருந்திக் கண்ணீர்விட்டு, அவரை அறிக்கை செய்து பாவமன்னிப்பின் திருமுழுக்குப் பெற்றுக் கரை ஏறுதலையும் (ஒ.நோ. அப்.2:37-42; மாற்.16:16; அப்.8:36-38), அவ்வாறு கிறிஸ்துவுக்குள்ளான வாழ்வில் தொடர்ந்து அவருடைய சித்தத்தின்படி வாழ்ந்து, வாழ்க்கைக் கரையைக் கடந்து நித்தியத்திற்குள் செல்லுதலையும் அகத்தியர் இப்பாடலில் கூறுகின்றார்.

## வேதத்தின் வெளிச்சம்

18. கைக்கொள்ள வேணும் என்றால்; இன்னம் வேறே
    கற்பனையும் உண்டு; அதைக் கருத்தில் வைத்தே,
பைக்கொண்ட பிதா மாதாப் பாதம் போற்றி,
    பழிமோக நினைவகற்றிப் பாவைமாரைத்
திக்கென்ன நினையாமல் இருட்டைப் போக்கி

சிவம் வேணும் என்று தினம் செபத்தைச் செய்து
மெய்க்கொண்டே இருந்திடுவாய், சொல்லிப் போட்டேன்
வேதாந்த வேதத்தின் வெளிச்சமாமே."

**(க-ரை) :** இன்னும் கைக்கொள்ள வேண்டிய கற்பனைகள் உண்டு : அவற்றைக் கருத்தில் வைக்கவேண்டும்; தாய் தகப்பன்மாரைப் போற்ற வேண்டும்; பழிவாங்குதல், மோக எண்ணங்கள் முதலான பாவங்களை நினைவிலிருந்தும் நீக்கி இருளை அகற்ற வேண்டும். மோட்சம் வேண்டும் என்று நாள்தோறும் ஜெபம் செய்தல்வேண்டும்; சத்தியத்தைப் பின்பற்றி வாழ வேண்டும். வேதம் கூறும் வேதாந்தத்தின் வெளிச்சத்தை நான் சொல்லிவிட்டேன்.

**(கு-ரை) :** வேதாந்த வேதத்தின் வெளிச்சமாக மக்களுக்கு அருளிச் செய்துள்ள முக்தி வாழ்வை நோக்கிக் கைக்கொள்ள வேண்டியவற்றை சொல்லிவிட்டேன்; மெய்ப்பொருளைப் பின்பற்றி வாழ்ந்திடுவாயாக என்று அகத்தியர் இறுதியில் அறுதியிட்டுரைக்கின்றார்.

நானே சத்தியம் (யோவான் 14:6) என்று சொன்ன கிறிஸ்துவாகிய **சத்தியத்தைப்** பின்பற்றி வாழவேண்டும் என்பதே **வேதத்தின்** வெளிச்சம் என்பதை **அகத்தியர்** இப்பாடலில் கூறுகின்றார்.

## வேதாந்தத் தமிழ் மார்க்கம்

19. வேதாந்தத் தமிழ் மார்க்க முறையைக் கேளு;
விரித்துரைக்கப் பெரியோர்க்குக் கோபம் வேண்டாம்
நாதர் என்னு மும்மூர்த்தி நரகப் பேய்கள்
நாடுதனில் பலப்பல தந்திரங்கள் பண்ணி
காதாந்த மாயவலை கண்ணிக்குற்றி
காசிங்கை என்று நவதானம் பண்ணி

மாதாந்த உருவமே எடுத்து இந்த
வையகத்தை மயக்கினார் வகுத்துப் பாரே!

**(க-ரை) :** வேதாந்த தமிழ் மார்க்கத்தின் முறையைக் கூறுகின்றேன்; கேட்க: நான் இதனை விரிவாகக் கூறுவதனால் பெரியோர்களுக்கு என்மீது கோபம் வேண்டா; கடவுளர் என்று சொல்லப்படும் மும்மூர்த்திகளும் நரகப் பேய்கள்; அவர்கள் நாட்டில் பற்பல தந்திரங்கள் பண்ணினார்கள்; மக்கள் மாய வலை கண்ணிகளுக்கு உட்படுத்தினார்கள்; காசிக்கும் கங்கைக்கும் புண்ணிய யாத்திரைகள் செய்யவும், பற்பல தான தருமங்கள் பண்ணவும் செய்தார்கள்; மாதா மாதம் வெவ்வேறு வடிவங்கள் எடுத்து இந்த வையகத்தை மயக்கி விட்டார்கள்; வகைப்படுத்தி ஆராய்ந்து பாருங்கள்.

**(கு-ரை) :** வேதாந்தத்தின் வழி வந்த தமிழ் மார்க்கத்தில் விளங்கும் மும்மூர்த்திகளாகிய சிவன், பிரம்மா, விஷ்ணு ஆகியவர்களைக் குறித்து இப்பாடலில் கூறுகின்றார் **அகத்தியர்**. தாம் அவர்களைக் குறித்து அறிந்த உண்மையைப் பச்சையாகக் கூறுவதால் பெரியோர்கள் தம்மீது கோபப்பட வேண்டாம் என்று அன்புடன் வேண்டுகின்றார். அவர்களை நரகப் பேய்கள் என்றும், அவர்கள் வழியாகத் தோன்றிய தந்திரங்களாலும், புண்ணிய யாத்திரைகளாலும், சடங்குகளாலும், உலக மக்கள் மயங்கிவிட்டார்கள் என்றும், இதனை அறிவுள்ளவர்கள் சிந்தித்துப் பார்க்கட்டும் என்றும் விரும்பி வேண்டிக் கூறுகின்றார்.

மேலும் 10ம் பாடலில் மும்மூர்த்திகளை வெறும் மனிதர் என்று சுட்டியிருப்பதையும் காண்க.

இப்பாடலில் மும்மூர்த்திகளை அடிப்படையாகக் கொண்ட காசி, கங்கை முதலான புண்ணியத் தலங்களுக்கும் புண்ணிய நதிகளுக்கும் யாத்திரைகள் செய்து நீராடுவது ஆன்ம ஈடேற்றத்தை கொடுக்காது என்பது **அகத்தியர்** கண்டு கூறியுள்ள முடிவாகும்.

## தினமும் செபம் செய்ய வேண்டும்

20. பாரப்பா! இப்படியே தெளிவு இல்லாமல்,
பராபரத்தை அறியாமல் மோசம் போறார்;
ஆராப்பா! எதிர்ப்பார்கள் என்னோடேதான்?
அஞ்ஞான மூடர்கள் அதை எண்ணார்கள்;
வேரப்பா! சிவலிங்கம், விட்டுணுலிங்கம்,
வேதாந்த லிங்கமதை விரித்துப் பார்த்தால்;
சேரப்பா! கசுமால நாற்றம், நாற்றம்;
சிவம் வேணும் என்று தினம் செபத்தைச் செய்யே!

**(க-ரை) :** பார்: இவ்வாறு தெளிவில்லாமலும் பராபரத்தை அறியாமலும் மக்கள் மோசம் போகின்றார்கள்; இதனை என்னோடு எதிர்ப்பவர்கள் யார்? அஞ்ஞானிகளாகிய மூடர்கள் அதனை எண்ணிப் பார்க்க மாட்டார்கள்; சிவலிங்கம், விட்டுணுலிங்கம், இன்னும் வேதாந்தலிங்கம் முதலானவற்றை விரித்துப் பார்த்தால் விரும்பத் தகாத வெறுப்புத்தான் உண்டாகும்; மோட்சம் வேண்டும் என்று நாள்தோறும் செபம் செய்வாயாக.

**(கு-ரை) :** உண்மையான பராபரத்தை அறிந்து கொள்ளாமல் மக்கள் மோசம் போகும் நிலையைக் குறித்து அகத்தியர் இப்பாடலில் வருந்துகின்றார். யார் தம்முடன் சேர்ந்து இந்தத் துன்பமான நிலையை எதிர்த்துச் சீர்த்திருத்தம் செய்வார்கள் என்றும் ஏங்குகின்றார்.

ஆன்ம அறிவுத் தெளிவுபெற்று பாவத்தை அறிந்து நாள்தோறும் முக்தி வேண்டி செபம் செய்து (1 தெச.5:17) வாழவேண்டும் என்று இப்பாடலில் வற்புறுத்துகின்றார் அகத்தியர்.

## தீட்சை பெற்றுக் கடவுளைத் தேடுதல் வேண்டும்

21. செபத்தையே செய்வதற்குச் சீவன் வேணும்;
செபம் செய்யத் திருச்சித்தம் தேடவேணும்
பவத்தையே ஒழிப்பதற்குக் கண்ணீர் வேணும்
பரன்பாதம் அடைவதற்குத் தவசு வேணும்;
அவத்தமாய் பலதானம் பண்ணவேண்டாம்;
ஆறுகுளம் தனில் முழ்கி அலையவேண்டாம்;
சிவன் பேரில் ஆணைப்படி சொல்லிப்போட்டேன்;
தீட்சை பெற்று சிவபாதம் தேடுவாயே!.

**(க-றை) :** செபத்தைச் செய்வதற்குச் சீவன் வேண்டும்; செபத்திலே கடவுளுடைய திருச்சித்தத்தைத் தேடவேண்டும்; பாவத்தை ஒழிப்பதற்கு மனம் வருந்தி, கண்ணீர் சிந்த வேண்டும்; கடவுளின் திருவடிகளை அடைவதற்குத் தவ வாழ்வு வாழ வேண்டும்; பயனில்லாததான தருமங்களைப் பண்ணவேண்டாம் ஆறுகளிலும் குளங்களிலும் மூழ்கி ஊர் ஊராக அலைய வேண்டாம்; கடவுள் பேரிலுள்ள ஆணைப்படிச் சொல்லுகின்றேன்; தீட்சை (திருமுழுக்கு) பெற்று மோட்ச வாழ்வைத் தேடுவாயாக.

**(கு-றை) :** செப வாழ்வை இங்கு மீண்டும் வற்புறுத்துகின்றார். இப்பாடலில் செபம் செய்வதற்கு என்ன வேண்டும் என்பதையும், செபம் செய்வதில் தேடவேண்டியது என்ன என்பதையும் கூறுகின்றார். செபம் செய்வதற்குச் சீவன் வேண்டும் என்கிறார். விசுவாசிகளின் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு அவர்களுக்குள் உயிருடன் உயிராக இருப்பவர் பரிசுத்த ஆவியானவர். சீவன் என்பதால் ஆவியானவர் குறித்துக் காட்டப்படுகின்றார். நாம் பரிசுத்த ஆவியினாலே செபம் செய்ய வேண்டும் என்று வேத வசனம் கூறுகின்றது. "எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே செபம் பண்ணி, அதன்

பொருட்டு மிகுந்த மன உறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள்." (எபே.6:18)

இப்பாடலில் அகத்தியர் கடவுளின் திருவடிகளை அடைவதற்குச் செய்ய வேண்டியவை எவை, செய்ய வேண்டாதன எவை என்று அறிவுறுத்துகின்றார்.

## மெய்ஞ்ஞான பாதையின் அடையாளம் பத்துமொழி

22. தெரிசிப்பாய் புலத்தியனே நன்றாய்க் கேளு;
செப்பினதோர் நூல்கள் எல்லாம் சுட்டுப்போடு;
அரிசிப்பாய் ஓர்வழி மெய்ஞ்ஞான பாதை
அடைவதற்கு அடையாளம் ஒன்று சொல்வேன்
பரிசிப்பாய் பத்துமொழி கையில் கொண்டு
பரப்பிரமம் ஒன்றையே நாடிக் கொண்டு
வரிசிப்பாய் நிலைதவறா மாக்கம் தேடி
வணங்குமந்த மறை புகுந்து வாழுவாயே!.

**(க-ரை) :** புலத்தியனே நான் சொல்வதைக் காணும்படி நன்றாய்க் கேளு; மேலே நான் குறிப்பிட்ட வேண்டாத நூல்களை எல்லாம் எரித்துப் போடு; ஒரே வழியாகிய மெய்ஞ்ஞான பாதையில் பத்து கற்பனைகள் உண்டு; அவற்றை அடையாளமாகக் கொண்டு பரப்பிரமமாகிய கடவுள் ஒருவரையே தேடி, நிலை தவறாத மார்க்கத்தை அடைந்து, திருமறையின் உபதேசத்தின்படி அவரை வணங்கு; பின்பற்று.

**(கு-ரை) :** பத்துக் கற்பனைகளை அடையாளமாக அகத்தியர் கூறியதன் உட்பொருள் என்னவென்றால் : அந்தப் பத்துக் கற்பனைகளை அடிப்படையாகக் கொண்ட பழைய ஏற்பாட்டின் மார்க்கமே, **பரமகுரு** உலகத்திற்கு வரும் வரைக்கும் உண்மையான மார்க்கம் உலகத்தில் இருக்குமாறு கடவுள் அருளிச்செய்தது;

அவற்றின் அடிப்படையிலே கடவுள் மனிதனுடன் கிறிஸ்துவின் வருகைக்கு முற்பட்ட காலத்தில் நேரடித் தொடர்பு கொண்டிருந்தார்; இதனால் அக்காலத்திலும் இக்காலத்திலும் உலகத்திலிருக்கும் ஏனைய மார்க்கங்கள் என்று சொல்லப்படுபவை எல்லாம் மனிதன் கடவுளைத் தேட முற்பட்டதன் விளைவாகத் தோன்றிய கொள்கைகளும் அவற்றின் விரிவுகளும் விபரீதங்களுமே என்பதைத் தெரிவிக்க என்று அறிக. பத்துக் கற்பனைகளின் விளக்கம் முன்னமே கூறப்பெற்றது.

"பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும் வகை வகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளபற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார். இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்." (எபிரெயர்.1:1,2).

இப்பாடலில் **அகத்தியர்** மெய்ஞ்ஞான பாதையயை அடையாளத்துடன் காட்டி, அப்பாதையை வெளிப்படுத்தும் திருமறையைக் கற்று அதன்படி கடவுளை வணங்கி வாழ வேண்டும் என்று தெரிவிக்கின்றார்.

### செகசோதியானவரை வணங்குவீர்களாக

23. வணங்குவாய் செகசோதி ஒருவனாகி மானிலத்தை
ஒரு நொடியில் வகுத்தே மண்ணில்
குணமான மனிதரையும் படைத்த பின்பு குவலயத்தில்
தான் உதித்து குருவாய் வந்து
கனமான சமுசாரம் ஒன்று இல்லாமல் சன்னியாசி போல்
இருந்து தவத்தைக் காட்டி
அன்பான சித்தர்களை இருத்திப்போட்டு அகண்ட தலம்
சென்றவரை அண்டுவாயே."

**(க-ரை)** : உலகத்தில் ஒளியாக வந்த அந்த ஒருவரையே வணங்குவாயாக, இந்த உலகத்தை அவர் ஒரு நொடியில் உண்டாக்கினார்; மனிதரை பூமியின் மண்ணினாலே உண்டாக்கினார்; பின்பு இந்த உலகத்தில் குருவாக வந்து தோன்றினார்; மனைவி பிள்ளைகள் என்று யாரும் இல்லாமல் சன்னியாசியாக வாழ்ந்து தவ வாழ்வை மக்களுக்குக் காட்டினார்; பின்னர் தம்மில் அன்பு பூண்டு ஒழுகிய சித்தர்களாகிய பன்னிரு அப்போஸ்தலர்களை உலகத்திலே தமது ஊழியத்தைத் தொடர்ந்து செய்யுமாறு விட்டுவிட்டு விண்ணுலகத்திற்குச் சென்றார்; அவரைச் சேர்ந்து கொள்வாயாக.

**(கு-ரை)** : இப்பாடலில் பரமகுருவாம் இயேசுகிறிஸ்துவின் வரலாற்றை இரத்தினச் சுருக்கமாக அகத்தியர் கூறி தெளிவிக்கின்றார். 22-ம் பாடலில் அவரை அடையாளத்துடன் நமக்குக் காட்டியவர் இப்பாடலில் வரலாற்றுடன் காட்டுகின்றார். அவ்வாறு காட்டுவதுடன் அமையாது அவரையே வணங்கிச் சேர்ந்து கொள்ளவேண்டும் என்பதையும் தெரிவிக்கின்றார்.

**வணங்குவாய் செகசோதி ஒருவனாகி :**

"அவருக்குள் (இயேசு) ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனிதருக்கு ஒளியாயிருந்தது. அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கின்றது. இருளானது அதைப்பற்றிக் கொள்ளவில்லை. உலகத்திலே வந்து எந்த மனிதனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி" (யோவான் 1:4,5,9) "ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனிதருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப் பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத் தீர்ப்புக்குக் காரணமாக இருக்கிறது. பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான், தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு, ஒளியினிடத்தில் வராதிருக்கிறான், சத்தியத்தின்படி செய்கிறவனோ,

தன் கிரியைகள் தேவனுக்குள்ளாய்ச் செய்யப்படுகிறதென்று வெளியாகும்படிக்கு, ஒளியினிடத்தில் வருகிறான் என்றார்" (யோவான் 3:19-21). "நான் உலகத்திலிருக்கையில் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்" என்றார் **பரமகுருவானவர்**. (யோவான் 9:5).

உலக ஒளியாகிய இயேசுபெருமானின் வாழ்க்கை வரலாறு, அவருடைய பன்னிரு அப்போஸ்தலர்களாகிய சித்தர்கள் அவரிடத்தில் பெற்ற பயிற்சி, அவர்களுடைய ஊழியம் முதலானவற்றைப் புதிய ஏற்பாட்டினைப் படிப்பதனால் நன்றாகத் தெரிந்துகொள்ளலாம்.

இப்பாடலில் செகசோதியாம் **பரமகுருவானவரை** விவரமாகக் காட்டி அவரை மக்கள் அண்டிக் கொள்ளவேண்டும் என்று அறிவுறுத்துகின்றார் அகத்தியர்.

## ஒன்றான மார்க்கம்

24. அண்டாமல் இருப்பது என்ன என்று கேட்டால்
ஐயையோ சீவன் காற்று அகத்தியா என்னும்
ஒன்றான மார்க்கமதை விரித்துக் காட்டிக்
உலகமதில் இந்நூலை விரிக்கச் செய்து
தண்டாமல் பொதிய மாமலையில் என்னைத்
தாபித்துத் தயங்காமல் இருக்கச் சொல்லி
ஒன்றான பரப்பிரமம் சொன்னார் சொன்னார்
ஓகோகோ புலத்தியனே உரைத்திட்டேனே."

**(க-ரை) :** கடவுளைச் சென்று அடையாமல் இருப்பது என்ன அகத்தியா என்று என்னைக் கேட்டால் : அவர் படைத்த ஆத்துமாக்கள்தான்; ஐயையோ! இதனை நான் என்னவென்று சொல்வேன்! ஒன்றான பரப்பிரமமாகிய கடவுளை, மக்களுக்கு அருளிச் செய்துள்ள ஒரே மார்க்கத்தை உலகத்தவர்க்கு இந்த நூலில் விரிவாகக் காட்டும்படி எனக்குக் கட்டளையிட்டார், பின்னர்

என்னைப் பொதிகை மாமலையிலே தங்கி இருக்கக் கட்டளையிட்டார்; ஓ புலத்தியனே! அவர் சொன்னபடி உரைத்துவிட்டேன்.

**(கு-ரை) :** இதனால் இந்நூல் இறைவரின் திருவருளாணைப்படி அகத்தியரால் செய்யப்ப்ட்டது என்பது தெளிவாம். ஒன்றான மார்க்கம் இயேசுபெருமான்: "நானே வழியும்..." (யோவான் 14:6).

பரப்பிரமமான கடவுளின் ஆணைப்படி நான் ஒன்றான மார்க்கத்தை விரித்து உலகத்தவர்க்கு காட்டியிருக்கிறேன் என்கிறார் அகத்தியர் இப்பாடலில்.

## நூலின் எதிர்காலம்

25. உரைத்திட்டேன் என்று சொல்லிச் சித்தர் எல்லாம்
ஒட்டாரமாக என்னைக் கோபிப்பார்கள்;
மறைத்திட்ட பெரியோரும் உலகத்தோரும் மயங்குவார்
என்னையுமே வசையாய்ச் சொல்வார்;
குறைத்திட்டே உரைத்த இந்த நூலைத்தானே
கூசாமல் சொல்லிவிட்டேன் கிழிக்கப் பார்ப்பார்;
அறைந்திட்டேன் புலத்தியனே சமயம் பார்த்து
அவர்களுக்கும் காண்பிப்பாய் அறியத்தானே.

**(க-ரை) :** கடவுள் கட்டளைப்படி நான் உண்மையை உரைத்திட்டேன் என்று சித்தர்கள் எல்லாரும் என்மீது கோபம் கொள்வார்கள்; சத்தியத்தை மறைத்துவிட்ட பெரியவர்களும் உலகத்து மக்களும் இதனை அறிந்து மயக்கம் போட்டு விடுவார்கள்; என்னை திட்டிப் பழிப்பார்கள்; பெரிதும் சுருக்கி எழுதிய இந்நூலின் செய்தியை நான் கூசாமல் சொல்லிவிட்டேன்; இதனைக் கிழித்து அழிப்பதற்குப் பார்ப்பார்கள்; புலத்தியனே நான் சொல்ல வேண்டியதைக் கடவுள் ஆணைப்படிச் சொல்லிவிட்டேன். நீ தக்க சமயம் பார்த்து அவர்கள் இதன் செய்தியை அறியத்தக்கவாறு அவர்களுக்கு காண்பிப்பாயாக என்றவாறு.

**(கு-ரை)** : இப்பாடலில், அகத்தியர், தாம் கண்டறிந்த மெய்ப்பொருளைக் கடவுள் உத்தரவின்படி திட்டமும் தெளிவுமாக உரைத்துவிட்டதனால், ஏனைய சித்தர்கள் எல்லாரும் ஒருமித்துத் தம்மீது கோபிப்பார்கள் என்கிறார். உண்மையைப் புலப்படுத்தியமையால் அதனை இதுகாறும் மறைத்து வைத்திருந்த பெரியவர்கள் என்று கருதப்பட்டவர்களும், ஏனைய உலகத்தவரும் ஈடேற்ற வாழ்வை ஏற்றுக்கொண்டு அகத்தியரைப் போலத் தள்ள வேண்டியவற்றைத் தள்ளி, கொள்ள வேண்டியவற்றைக் கொண்டு மனத் தெளிவுபெறாமல் மயங்குவார்கள்; இதன் விளைவாகத் தன்னைத் திட்டுவார்கள் என்கிறார். உண்மையை ஒப்புக்கொள்ளாத நிலையில் இத்தகைய நிலைகள் எழுவது இயல்பன்றோ! இயேசு பெருமான் அறிவித்த சத்தியத்தை ஏற்றுக்கொள்ள மனமில்லாத மக்கள் அவரையே வைதார்கள் அல்லவா? பவுலடியாரைத் துன்புறுத்தினார்கள் அல்லவா? ( II கொரிந்தியர் 11:23-24; அப்.9:1-23). ஸ்தேவான் கல்லெறியப்பட்டு திருச்சபையின் முதல் இரத்தசாட்சியாக மரிக்கவில்லையா? (அப்.7). மெய்ப்பொருளைக் கண்டு அடைந்தவர்களும், மெய்ப்பொருள் தொண்டர்களும் தொடக்க முதலே அநேக உபத்திரவங்களினூடே வாழ்ந்தும், மெய்ப்பொருளை அறிவித்தும் வருகின்றார்கள். "அல்லாமலும் அந்தந்தச் சபைகளில் அவர்களுக்கு மூப்பர்களை ஏற்படுத்தி வைத்து, உபவாசித்து ஜெபம்பண்ணி, அவர்கள் விசுவாசித்துப் பற்றிக்கொண்ட கர்த்தருக்கு அவர்களை ஒப்புவித்தார்கள். (அப்.14:23). "நீ படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே; இதோ, நீங்கள் சோதிக்கப்படும்பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்; பத்துநாள் உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவக் கிரீடத்தை உனக்குத் தருவேன்" (வெளி.2:10). மேலும் எபிரெயர் 11ஆம் அதிகாரத்தையும் காண்க.

ஆறு இலட்சம் பாடல்களை முப்பது பாடல்களில் சுருக்கி உரைத்த இந்த நூலைக் கிழித்து எரிவார்கள் என்று அகத்தியர் அஞ்சுகின்றார். **பரமகுருவின்** திருத்தூதராக தமிழகம் வந்த தோமா ஏற்படுத்திய கிறிஸ்தவத்தின் விளைவாக, தமிழ் மொழியில் தோன்றிய கிறிஸ்தவ இலக்கியங்கள் எல்லாம் அழிக்கப்பட்டனவன்றோ!

ஆனால் இந்நூல் எழுதப்பட்டக் காலம்முதல் கடவுளால் காக்கப்பட்டு 1924 வரையில் 17 பக்க அளவில் 5 பதிப்புகள் வெளிவந்துள்ளன; 30,000 படிகள் அச்சிடப்பட்டுள்ளன; (Religious tract and Book Society in union with the C.L. Society, C.L.S. Press, Madras, 1924) விக்கிரம சிங்கபுரத்து அ. வள்ளிநாயகம்பிள்ளை என்பவர் கிட்டத்தட்ட இதைப் போன்றே இன்னொரு பதிப்பு வெளியிட்டுள்ளார். 1981இல் திருச்சியில் நடந்த முதல் உலகக் கிறிஸ்தவ தமிழ் மாநாட்டின்போது 252 பக்க அளவில் அமைந்த விரிவான ஆராய்ச்சியுரை வெளியிடப்பட்டது; இப்பொழுது சுருக்கமாக அமைந்த இந்தத் தெளிவுரை வெளிவந்துள்ளது. மெய்ப்பொருளை யார் மறைக்க இயலும்?

**அறைந்திட்டேன் புலத்தியனே சமயம் பார்த்து, அவர்களுக்கும் காண்பிப்பாய் அறியத்தானே :** டாக்டர் லூக்கா தாம் எழுதிய நற்செய்தி யாகமத்தையும் அப்போஸ்தலர் நடபடிகளாகமத்தையும் தேயோப்பிலுவே என்னும் ஒருவரை முன்வைத்து எழுதுகின்றார். இந்தப் பெயருக்குத் "தேவனில் அன்பு செய்பவன்" என்பது பொருள். அவ்வகையில் இங்கே புலத்தியன் என்று அகத்தியர் விளக்கும் ஆள் ஒரு மெய்ப்பொருள் அறிஞர், நண்பன், வாசகர் என்று பொருளாகிறது. இப்பாடல்களுக்கு பொருள் அறிவு பெற்றவன் என்றும் கொள்ளலாம். இந்நூலின் உரை ஆசிரியனையும் இது குறித்துக் காட்டுகின்றது. மெய்ப்பொருள் தெளிவு பெற்றவன் அத்தெளிவு பெறாதவர்களுக்கு இந்நூல் வாயிலாக தக்க சமயத்தில் மெய்ப்பொருளை அறிவித்து தெளிவு

பெறச் செய்யவேண்டும் என்பது அகத்தியர் ஜெபம். உங்களையும் இணைத்தே அகத்தியர் இங்கு கூறியுள்ளதைக் காண்க. அகத்தியரின் ஜெபத்தைக் கடவுள் செயல்படுத்தாமல் விடவில்லை.

மெய்ப்பொருளை கண்டடைந்தவர்கள் அம்மெய்ப்பொருளை மற்றவர்களுக்கும் தெரிவிக்க வேண்டும் என்பது இப்பாடலில் அகத்தியருடைய ஆலோசனையாகும்.

## மக்கள் தேட வேண்டிய சித்தர்கள்

26. அரிபாதம் அரிச்சை செய்யும் சித்தர் எல்லாம்
ஆசை முறை தானடக்கி, அன்பதாகும்
பொறியகந்தைத் தானடக்கிப் பொசிப் பொடுக்கி
பூரணத்து ஞானம் அதைப் பிரசங்கித்து,
சரியாக ஆத்துமத்தின் கசட்டைத் தீர்க்கும்
சற்குருவைத் தேடிப்போய்ச் சடங்கு செய்து
அரிபாதம் காண்பிப்பார்சித்தர் உண்டு;
அம்புவியல் அவர்களை நீ தேடுவாயே!

**(க-ரை) :** கடவுளின் திருவடிகளை ஆராதித்து வழிபடும் சித்தர்கள் எல்லாரும் உடலின் ஆசைகளை எல்லாம் அழித்து, கடவுள் அன்பின் வழிப்பட்ட வாழ்வை மேற்கொண்டு, மரணத்தின் அகந்தையை ஒழித்து, பசியார்வங்களுக்கு மரித்து, பூரண பரம்பொருளாம் இறைவனுடைய ஞானத்தை பிரசங்கம் செய்து, ஆத்துமாவின் பாவத்தைச் சரியானவாறு தீர்ப்பார்கள்; சற்குருவாகிய மீட்பரைத் தேடிச் சென்று உரிய கிரியைகள் நடப்பித்து, கடவுளின் திருவடிகளில் சென்றடையச் செய்வார்கள்; இந்த உலகத்தில் அத்தகைய சித்தர்கள் உண்டு; அவர்களை நீ தேடுவாயாக.

**(கு-ரை) :** அகத்தியர் இந்தப் பாடலில் நாம் தேட வேண்டிய சித்தர்களைத் தெரிவிக்கின்றார். தேவனை மனிதர் தேடிக்

கண்டுபிடிப்பதற்குரிய சாட்சியை அவர் வைக்காமல் இல்லை. "உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியால் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம்பண்ணுகிறதில்லை. எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர், தமக்கு யாதொன்று தேவையானது போல. மனிதர் கைகளால் பணிவிடை கொள்ளுகிறதுமில்லை. மனித சாதியான சகல மக்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி பூமியின் மீதெங்கும் குடியிருக்கச் செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கின்றார். கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுகொள்ளும்படிக்கு அப்படிச் செய்தார்; அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே! ஏனெனில் அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம், அப்படியே உங்கள் புலவர்களிலும் சிலர், நாம் அவருடைய சந்ததியார் என்று சொல்லியிருக்கிறார்கள். நாம் தேவனுடைய சந்ததியாயிருக்க, மனிதருடைய சித்திர வேலையினாலும் யுக்தினாலும் உருவாக்கின பொன், வெள்ளி, கல் இவைகளுக்குத் தெய்வம் ஒப்பாயிருக்குமென்று நாம் நினைக்கலாகாது. அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனிதர் எல்லோருக்கும் கட்டளையிடுகிறார். மேலும் ஒருநாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனிதனைக் கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனிதனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதன் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார் என்றார்." (அப்போஸ்தலர் 17:24-31)

பரமகுருவும் தம்மைக் குறித்து எழுதப்பட்டுள்ள சாட்சியை வேத வாக்கியங்களில் பார்க்குமாறு அழைக்கின்றார். "வேத

வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டு என்று எண்ணுகிறீர்களே, என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே." (யோவான் 5:39). ஆதிகாலத்து பக்தர்கள் இவ்வாறு வேத வாக்கியங்களை ஆராய்ந்து வாழ்ந்து நற்குணப் பேறு பெற்றவர்களாக விளங்கினார்கள். "அந்தப் பட்டணத்தார் மனோ வாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு காரியங்கள் இப்படி இருக்கின்றனவா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள்" (அப்போஸ்தலர் 17:11).

இப்பொழுதும் உலகிலுள்ள உண்மையான சற்குருவின் சித்தர்களை – ஊழியர்களைத்தேடி அவர்களிடம் மெய்வாழ்வு குறித்துத் தெளிவு பெற்றுக்கொள்ள வேண்டும் என்கிறார் அகத்தியர் இப்பாடலில்.

## கண்ணீரால் கழுவவேண்டும்

27. தேடுவாய் புலத்தியனே நன்றாய்க் கேளு
தீக்கிடங்கைத் தேடாதே தெளியச்சொன்னேன்
பாடுவார் பதினெட்டுப் புராணங்கட்கும்
பாரதமும் கட்டப்பா பரிகாசங்கள்
நாடதனில் பிராமணர்கள் பிழைக்கச் செய்த
நவக்கிரகக் கட்டப்பா; நம்ப வேண்டாம்;
ஓடுவார் அருள்பாதம் பூசை செய்து
உத்தமனே கண்ணீரால் கழுவுவாயே!

**(க–றை) :** புலத்தியனே நான் தேடச் சொன்னதை நன்றாயத் தேடு; நான் சொல்வதையும் கேட்கக்கடவாய்; உனக்கு எல்லாவற்றையும் தெளிவாய்ச் சொன்னேன்; இவற்றைக் கேட்டும் தீக்கிடங்காம் நரகத்தைத் தேடிச் செல்லாதே. பதினெட்டுப் புராணங்களும் மகா பாரதமும் வெறும் கட்டுக் கதைகள்; பரிகாசங்கள் நிறைந்தவை; நாட்டில் பிராமணர்கள் பிழைப்பதற்காகக் கட்டிவிட்ட நவக்கிரகக்

கதைகள் அவை; அவற்றை நம்ப வேண்டாம். திருவருள் நிறைந்த கடவுளுடைய திருவடிகளைப் போற்றி உத்தமனே உன்னுடைய கண்ணீரால் கழுவுவாயாக.

**கு-ரை) :** இப்பாடலில் அகத்தியர் மெய்வாழ்வையும் அதற்கு நேர் எதிரான நரகத்தையும் குறித்துக் காட்டி மெய்வாழ்வைத் தேடி அடையுமாறு அன்புடன் அறிவுறுத்துகின்றார்.

**அகத்தியர் ஞானம்** 16இல் 3 பாடுகின்றது:

"தானென்ற பெரியோர் களுலகத்துள்ளே
தாயான பூரணத்தை யறிந்தபின்பு
தேனென் றவமுதமதைப் பானஞ்செய்து
தெவிட்டாத மவுன சிம்யோகஞ் செய்தார்
ஊனென்றவுடலை நம்பி யிருந்தபேர்க்கு
ஒரு நான்கு வேதமென்றும் நூலாரென்றும்
நானென்றும் நீ என்றும் பலசாதியென்றும்
நாட்டினாரு லகத்தோர் பிழைக்கத்தானே."

**அகத்தியர் ஞானம்** 1இல் பாடுகின்றார்;

"பராப்பா நால்வேத நூலும் பாரு;
பற்றாசை வைப்பதற்கோ பிணையோ கோடி;
வீரப்பா ஒன்றுக்கு ஒன்றை மாற்றி
வீணிலே யவர் பிழைக்கச் செய்த மார்க்கம்
தேரப்பா தெருத் தெருவே புலம்பு வார்கள்
தெய்வநிலை ஒருவருமே காணார் காணார்;
ஆரப்பா நிலைநிற்கப் போறா ரையோ!
ஆச்சரியங் கோடியிலே யொருவன் தானே!"

தீக்கிடங்காம் நரகத்தை நோக்கி வாழாமல் தேவனின் திருவடிகளை அடைந்து மன - மொழி - மெய்யால் - அவரை பூசை செய்து வாழுமாறு பணிக்கின்றார் அகத்தியர்.

## முக்திபரன் அருகிருப்பாய்

28. கழுவியே ஆத்துமத்தைப் புடத்தில் போட்டு
காசகன்ற தட்சணையாய் வைத்துக் கொண்டு
மெழுகுவாய் இருதயத்தைக் கண்ணீராலே
மெழுகினபின் தேவ பக்தி அதிலே வைத்து
தொழுகுவாய் தவஞான தீபம் ஏற்றி
தோத்தரிப்பாய் சகல நன்மை சுரூபிகண்டாய்
முழுகுவாய் சிறு பொய்கைக்குள்ளே நீயும்
முக்திபரன் அருகிருப்பாய் முச்சுடராய்த் தானே.

**(க-ரை) :** ஆத்துமாவை கண்ணீரால் கழுவி, அதைப்புடமிட்டு மாசு நீக்கிய காணிக்கையாகக் கடவுளுக்கு வைத்துக்கொண்டு உன் இதயத்தை ஆனந்தத் கண்ணீரால் மெழுகு; பின்னர் தேவ பக்தியை அதிலே வைத்துத் தொழுதுகொள்வாய்; தவம், ஞானம் இவற்றின் தீபம் ஏற்றி சகல நன்மைக்கும் காரணராகிய கடவுளைத் ஸ்தோத்தரிப்பாய்; சிறுகுளத்திற் குள்ளே நீ திருமுழுக்குப் பெறுவாயாக; அப்பொழுது நீ பரலோக அரசனுக்கு அருகில் முச்சுடர் உறவுடன் இருப்பாய்.

**(கு-ரை) : முழுகுவாய்ச் சிறுபொய்கைக்குள்ளே நீயும்** என்றதால் அகத்தியர் இரண்டு கருத்துக்களை இங்கே கூறுவதாகத் தெரிகின்றது. ஒன்று பரமகுருவுக்குள்ளாகும் திருமுழுக்கு அனுபவத்தைக் கூறுகின்றார். பிலிப்பு எத்தியோப்பிய நிதி மந்திரியை உள்ளாக்கிய திருமுழுக்கு அனுபவத்தின் காட்சி இங்கே ஒப்புமைப்படுத்தி எண்ணிப் பார்க்கத்தக்கது. "அப்பொழுது பிலிப்பு பேசத் தொடங்கி, இந்த வேத வாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக் குறித்து அவனுக்குப் பிரங்கித்தான். இவ்விதமாய் அவர்கள் வழிநடந்துபோகையில், தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி : இதோ, தண்ணீர் இருக்கிறதே, நான்

ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன என்றான். அதற்குப் பிலிப்பு : நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லை என்றான். அப்பொழுது அவன் : இயேசுகிறிஸ்துவைத் தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள்; பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். அவர்கள் தண்ணீரிலிரந்து கரையேறினபொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டு போய்விட்டார். மந்திரி அப்புறம் அவனைக் காணாமல் சந்தோஷத்தோடே தன் வழியே போனான்." (அப்போஸ்தலர் 8:35-39). இவ்வாறு திருமுழுக்குப் பெறுவோர் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் திருப்பெயரால் பரம குருவின் கட்டளைப்படிப் பெறுகின்றனர். (மத்தேயு 28:18-20). இதனால் அவர்கள் முச்சுடர் என்று குறிக்கப்பட்டுள்ள தந்தை, மைந்தர், பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவருக்குள் வருவதுடன் அவர்கள் அருகில் இருக்கும் பரம பேறு பெறுகின்றனர். முன்னால் பாவத்தினிமித்தமும் கீழ்ப்படியாமையி னிமித்தமும் தூரமாக இருந்தவர்கள், இப்பொழுது பாவம் கழுவப்பட்டதனாலும் கீழ்ப்படிதலினாலும் நெருக்கமாக வந்துவிட்டனர். மூவரும், கீழ்ப்படிந்த பக்தர்களின் இதயத்தில் வாழ்கின்றனர். திருமுழுக்கில் கீழ்ப்படியும்போது பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளுகின்றனர். "பேதுரு அவர்களை நோக்கி : நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்." (அப்போஸ்தலர் 2:38).

இவ்வாறு தங்கள் இதயக் கதவைத் திறந்துவிட்ட பக்தர்களிடத்தில் குமாரனும் பிதாவுமாக வந்து குடியிருக்கின்றனர் என்று விளம்புகிறது வேதம். "இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில்

நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன். அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான்." (வெளி.3:20). "என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான். என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்; நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் என்றார்." "இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக, ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்வான்; அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்." (யோவான் 14:21,23).

இந்தத் திருமுழுக்கு இவ்வுலகத்தில் கிறிஸ்துவுக்குள்ளாக்கும் ஒரு மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலின் அனுபவத்தைப் பக்தர்களுக்குத் தருகின்றது. "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாம் அனைவரும் அவருடைய மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமல் இருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம், ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்து போகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனிதன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம். மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப் பட்டிருக்கிறானே." (ரோமர் 6:3-7) இங்கு பாவத்திற்கு மரித்து வாழ்வதை அதாவது, பரிசுத்த

ஆவியானவருடைய நடத்துதலுடன் பரமகுருவின் இரத்தத்தின் வல்லமையுடன் பாவத்தைச் செய்ய மறுத்து வாழும் வாழ்க்கையின் அனுபவத்திற்குத் தொடக்கமாகின்றது. இவ்வாறு தொடங்கிய அனுபவம் இவ்வுலகத்தில் உடலில் வாழும் காலம் முழுவதும் நீடித்திருக்க வேண்டியதாகும்.

**முழுகுவாய் சிறுபொய்கைக்குள்ளே நீயும்** என்றதால் இரண்டாவதாக சரீரத்தினின்று ஆவி பிரிந்து விண்ணுலகத்தில் முச்சுடராக விளங்கும் திரியேக பரமனுடன், நித்தியமாக அவர் அருகில் இருக்கப்போகும் பெருவாழ்வு அனுபவத்தைக் கூறுகின்றார். சரீரம் புதைகுழியில் மூழ்குகின்றது; ஆன்மா கடவுளண்டை சேர்கின்றது. "இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகாததற்கு முன்னும் அவரை உன் வாலிபப்பிராயத்திலே நினை." (பிரசங்கி 12:7).

இப்பாடலில் முக்தி வாழ்வின் நடைமுறைகள் சிலவற்றை விளக்கி, இவ்வாறு வாழ்ந்தால் மரணத்தைக் கடந்து முச்சுடராக விளங்கும் முக்திபரனாகியக் கடவுளுடன் ஆன்மா அங்கிருந்து வாழும் என்கிறார் அகத்தியர். ஒளிமயமான வாழ்க்கைக்குள் ஆன்மா நுழைகின்றது. இனி அங்கு இருளுக்கு இடமில்லை. என்றுமே ஒளிமயம். முச்சுடராக விளங்கும் கர்த்தரே வெளிச்சமாவார். அது நித்திய வாழ்வு. ஆன்மா முச்சுடரான முக்திக் கடவுளின் அருகிருக்கும் பேரின்பத்தை அறிவித்துள்ளார் இப்பாடலில் அகத்தியர்.

### எச்சரிக்கை

29. முச்சுடரும் ஒன்றாம் மும்மூர்த்தியல்ல;
    மூவருமே ஆளுருவம் ஒன்றேயாகும்;
அச்சுதா இவர்களுமே ஆண் பெண் அல்ல;
    அரனுமல்ல; இலிங்கமும் அல்ல; அநாதியான

சச்சிதானந்தனையே வணக்கம் செய்து,
சற்குருவைத் தரிசித்து சரண்பற்றி,
எச்சரிக்கை கொண்டு நட அப்பா! அப்பா!
எண்ணிலா முக்திவழி எய்துவாயே!

**(க–றை) :** பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய முச்சுடரும் ஒருவரேயாவர்; அவர்கள் மும்மூர்த்திகளைப்போல் வெவ்வேறான வர்களல்லர்; மூவருக்கும் ஆள் உருவம் ஒன்றேயாகும்; திரித்துவக் கடவுள் ஆண் என்னும் இல்லை; பெண் என்றும் இல்லை; அரசனும் அல்லர்; இலிங்கமும் அல்ல; அவர் அநாதியானவர்; சச்சிதானந்தர்; அவரையே வணங்கி சற்குருவாகிய கிறிஸ்துவை தரிசித்து அவருடைய திருவடிகளில் சரணடைந்து பற்றிக்கொண்டு எச்சரிக்கையுடன் அப்பா நீ நடப்பாயாக! அப்பொழுது எண்ணிக் கூற இயலாத முக்தி வாழ்வினை நீ அடைவாய்.

**(கு–றை) : முச்சுடரும் ஒன்றாம் மும்மூர்த்தியல்ல; மூவருமே ஆளுருவம் ஒன்றேயாகும் :** தந்தை, மைந்தர், பரிசுத்த ஆவியானவர் என்று தம்மை வெளிப்படுத்தியுள்ள திரியேகக் கடவுளாம் முச்சுடர் இந்திய நாட்டிலே அறியப்பட்டுள்ள சிவன், பிரம்மா, விஷ்ணு என்னும் மும்மூர்த்திகள் போன்றவர்கள் அல்லர் என்பதை வரையறுத்துத் தெரிவிக்கின்றார் அகத்தியர். மும்மூர்த்திகளைப் பற்றி முதல் பாட்டிலேயும் பத்தாம் பாட்டிலேயும் பத்தொன்பதாம் பாட்டிலேயும் குறிப்பிட்டுள்ளார். அங்கே கூறியுள்ள கருத்துக்களையும் இங்கே இணைத்து எண்ணித் தெளிக.

தந்தை, மைந்தர், பரிசுத்த ஆவியானவர் மூவரும் ஆளுருவத்தில் ஒருவரே என்கின்றார் அகத்தியர். அகத்தியருடைய கருத்திற்கு ஏற்ப டாக்டர் சி.சி. கிராபோர்டு என்பார், "கடவுள் ஆவியாயிருக்கிறார், அஃது அவருடைய இயற்கை. கடவுள் தனியொருவர். இருப்பினும் அவருடைய ஒருமை இயற்கைநிலை, திருவசனங்களில் பிதா,

மைந்தர், தூய ஆவி என்று வெளிப்படுத்தியிருக்கின்றவாறு ஒரு மும்மை ஆள் தன்மையினை உள்ளடக்கமாகக் கொள்ளுகிறதாய்க் காணப்படுகிறது" என்று கூறுகிறார். மேலும் அவர் "கடவுளின் திரித்துவப் பண்பின் போதனை இரட்சிப்பின் திட்டத்திற்கு இன்றியமையாதது. கடவுள் இந்த மும்பைப் பண்பில்லாத தனி ஒருவர் என்னும் நிலை இருக்குமாயின் கடவுளுக்கும் மனிதனுக்கும் மத்தியஸ்தம் இருக்கவியலாது; பாவப் பரிகாரம் இருக்கவியலாது; இறைவரிடம் பரிந்து மன்றாடுதல் இருக்கவியலாது; இரட்சிப்பு இருக்கவியலாது" என்று கூறுகின்றார்.

C.C. Crawford, *The Eternal Spirit : His Person and Power, pp.295ff*

இப்பாடலில் முச்சுடர் யார் என்றும், அவர் யார் அல்லர் என்றும், அவர் சச்சிதானந்தர் என்றும், சற்குரு என்றும் கூறி, அவரிடம் சரண்புகுந்து முக்தி வழி எய்த வேண்டும் என்று அறிவுறுத்துகின்றார்.

## 'பரமகுரு சொன்னபடி பாடினேன்'

30. ஓடுகின்ற வகைகள் எல்லாம் உரைத்துப் போட்டேன்;
உலகுதனில் மார்க்கம் எல்லாம் உகந்து சொன்னேன்;
தேடுகின்ற புராணம் எல்லாம் பொய்யே என்றேன்;
சிவன் பிரம்மா விஷ்ணு வெல்லாம் பேயே என்றேன்;
ஆடுகின்ற தீர்த்தம் எல்லாம் சத்துவென்றேன்;
அஞ்ஞானம் பண்ணுகின்ற அகந்தை என்றேன்;
பாடுகின்ற முப்பதுக்குள் அடக்கிப் போட்டேன்;
பரமகுரு சொன்படி பாடினேனே.

(க-றை) : கடவுள் பக்தி என்னும் நிலையில் மக்கள் வாழ்க்கையில் ஓடிக்கொண்டிருக்கின்ற எல்லா வகைளையும் உரைத்துவிட்டேன்; உலகத்திலுள்ள மார்க்கங்களெல்லாவற்றையும் விரும்பி

அறிவித்தேன்; தேடிக் கண்ட புராணம் எல்லாம் பொய்யே என்று அறிவித்தேன்; சிவன், பிரம்மா, விஷ்ணு முதலான எல்லாரும் பேயே என்று கூறினேன்; பல இடங்களுக்கும் சென்று தண்ணீரில் முழுகுவதெல்லாம் அசத்து என்றேன்; இவை அஞ்ஞானம் பண்ணுகிற அகந்தை என்றும் அறிவித்தேன்; இந்தச் செய்திகள் எல்லாவற்றையும் முப்பது பாட்டுக்குள் அடக்கிக் கூறிவிட்டேன்; என் சொந்தமாக நான் இவற்றைச் சொல்லவில்லை; பரமகுருவானவர் சொன்னபடியே பாடினேன் என்றவாறு.

**அஞ்ஞானம் பண்ணுகின்ற அகந்தை என்றேன்.** ஞானம் என்பது அஞ்ஞானம், விஞ்ஞானம், மெய்ஞ்ஞானம் என்று மூன்றாகப் பிரிகின்றது. விஞ்ஞானம் என்பது கடவுள் படைத்த சடப்பொருள் உலகத்தைப் பற்றிய அறிவு. உலக வரலாற்றிலேயே முன்னர் ஒருபோதும் இல்லாத நிலையிலே இன்று விஞ்ஞானமாகிய அறிவியல் வளர்ந்து முன்னேறி வருகின்றது. சடப்பொருள் உலகங்களைப்பற்றி மக்கள் கொண்டிருந்த அஞ்ஞானக் கருத்துக்களை விஞ்ஞானம் திருத்தி மக்களை நல்லறவி பெறச் செய்கிறது.

அவ்வாறே மெய்ஞ்ஞானம் உலக மக்கள் தங்கள். ஆவிக்குரிய வாழ்க்கையில் கொண்டிருந்த மூட நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் இவற்றின் பாற்பட்ட அஞ்ஞானக் கருத்துக்களையும் அகற்றி மெய்ப்பொருள் பற்றிய உண்மையான ஞானம் பெறச் செய்கின்றது. மெய்ஞ்ஞானமானது சடப்பொருள் உலகங்களைப்பற்றி இருந்த அஞ்ஞானத்தையும் அகற்றி உண்மை அறிவு பெற்று மனித வாழ்க்கையை நிலைபேறுடையதாக்குகின்றது.

கிறிஸ்துவே "தேவனால் நமக்கு ஞானமும் நீதியும், பரிசுத்தமும், மீட்புமானார்" (1 கொரி.1:31). கிறிஸ்துவே நமது ஞானம். இயேசு கிறிஸ்துவின் வாயிலாகக் கடவுள் சடப்பொருள் உலகங்களைக்

குறித்தும் வெளிப்படுத்தியிருக்கும் ஞானமே மெய்ஞ்ஞானமாகும். "பூர்வகாலங்களில் பங்கு பங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார். இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார். இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமாயிருந்து, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், தம்மாலே தாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலது பாரிசத்திலே உட்கார்ந்தார்" (எபிரெயர் 1:1-3). கிறிஸ்துவாகிய ஞானம் படைத்த உலகங்களை அறிவது விஞ்ஞானம். கிறிஸ்துவாகிய ஞானத்தின் வாயிலாகக் கடவுளை அடைவது மெய்ஞ்ஞானம்; கிறிஸ்துவாகிய ஞானத்திற்குப் புறம்பானவை எல்லாம் அஞ்ஞானம் என்றறிக.

தாம் மெய்ப்பொருள் அல்லது ஞானம் கண்ட வரலாற்றின் முடிப்புரையை இப்பாடலிலே அகத்தியர் கூறுகின்றார். பரமகுருவின் சொற்படி இந்தச் செய்தியை முப்பது பாட்டுக்குள்ளே அடக்கிப் பாடினேன் என்று திட்டவட்டமாகக் கூறி நூலினை முடிக்கின்றார் அகத்தியர். மகாவித்துவான் எ.ஆ. கிருஷ்ணபிள்ளையும் கிறிஸ்து பெருமானை '**சற்குரு**' என்றும் '**பரமகுரு**' என்றும் தமது இலக்கியப் படைப்புகளில் அழைத்து உள்ளார்.

"ஒருசின் மயசற் குருவாகி யுலகத் துதித்து சீவரட்சை
தருசன் மார்க்க நெறியிதெனத் தமநல் லொழுக்கஞ் சான்றாகத்
துருசின் மனத்தோடுபதேசஞ் சொல்லிச் சுகிர்த பலியாய்வெங்
குருசின் மடிந்த குருசிலைக்கை கூப்ப வாரும் செகத்தீரே."

"வேதம் ஒன்றே மெய் உள்ளங்கை
 நெல்லிக் கனிபோல் விளங்குதிதோ
நாதன் ஒருவர் உளர் உலகம்
 நவிலும் சான்று நற்கதியின்
பாதை ஒன்றுண்டு அது கிறிஸ்து
 மார்க்கம் இதனைப் பகுத்துணர்ந்து
கோதில் பரம குருபாதம்
 கும்பிட்டு ஏத்தும் செகத்தீரே"

*(இரட்சணிய யாத்திரிகம் : நிதானப் பருவம் : இரட்சணிய நவநீதப் படலம்.55,38.)*

**பரமகுரு** சொன்னவாறு அகத்தியர் தம் நூலைப்பாடி நிறைவு செய்தார். அடியேனும் பரமகுருவின் ஏவுதலின்படி இந்தத் தெளிவுரையை எழுதி அமைகிறேன்.

வாழ்க பரமகுரு! வாழ்க பரமகுருவின் திருச்சபை!
 வாழ்க பரமகுருவின் அடியார்கள்!!

பரமகுருவின் அருள் உங்களோடு எப்பொழுதும் இருப்பதாக!

**ஆமென்.**

அகத்தியர் ஒரு சித்தர்.
பதினெட்டுச் சித்தர்களுள் ஒருவர்.
முன்னாள் சென்னைப் பல்கலைக் கழகத்தின்
வரலாற்றுப் பேராசிரியர்
டாக்டர் கே. கே. பிள்ளை, சிதத்தர் வரிசையில்
அகத்தியருக்கு முதலிடம்
அளிக்கப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார்.
இந்த சித்தர் அகத்தியர் ஒரு கிறிஸ்தவர்.
இவர் தாம் கிறிஸ்துவில் கண்ட ஞானத்தை
30 பாடல்கள் கூறியுள்ளார்.
இத்தெளிவுரை அதனை உள்ளங்கை
நெல்லிக்கனிபோல் காட்டுகின்றது.
படித்துப் பயன்பெறுங்கள்.

# AGATHIYAR'S WISDOM
## COMMENTARY
BY
DR. V. GNANASIKHAMANI

Design & Print : Meipporul ☎ 044 - 26741526